**வாடிக்கையாளர் தகவல் தெரிவிப்புக் கையிதழ்**

- சேமிப்புக் கணக்கு என்பது ஒரு சேமிப்புக் கணக்கைத் திறப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதாக இந்திய ரிசர்வ் வங்கியால் (*RBI*) குறிப்பாக அனுமதிக்கப்படுகிற தனிநபர்கள் / நிறுவனங்களுக்கான ஒரு இயங்குகிற வங்கிக் கணக்காகும். ஒரு சில இலாப-நோக்கு அல்லாத நல ஸ்தாபனங்களுக்கும், வங்கிகளில் சேமிப்பு வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதியளிக்கப்படுகின்றன. ஆர்பிஐ-ஆல் வரையறுக்கப்பட்ட வட்டி விகிதத்தில், சேமிப்புக் கணக்கில் உள்ள இருப்புத் தொகையின் மீது வட்டி வழங்கப்படுகிறது. மற்றவையோடு சேர்த்து, சேமிப்புக் கணக்கு திறப்பதற்குத் தகுதியுடைகிறவர்கள் என்பதில், இந்தியாவில் வசிக்கிற, அயல்நாட்டில் வசிக்கிற இந்தியத் தனிநபர்கள், அறக்கட்டளைகள், சொசைட்டிகள், நிறுவனங்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவை அடங்குகின்றனர். ஆர்பிஐ-ஆல் அவ்வப்போது விதிக்கப்படுகிற ஒருசில நிபந்தனைகளுக்கு உட்பட்டு மற்றும் அந்த நிபந்தனைகளைபூர்த்தி செய்தால், ஒரு சில அரசாங்க அமைப்புகளும் சேமிப்புக் கணக்குகளைத் திறந்து கொள்ளலாம்.
- ‘‘**நடப்புக் கணக்கு**’’ என்பது ஒரு வங்கிக் கணக்கைத் திறந்து இயக்குவதற்குத் தயகுதியுள்ள அனைத்து தரப்பினருக்குமான ஒரு இயங்குகிற வங்கிக் கணக்காகும். ஆர்பிஐ-ஆல் வரையறுக்கப்பட்டுள்ள படி, நடப்புக் கணக்கில் வைத்துள்ள இருப்புத் தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்படுதில்லை.
- ‘‘**கால வைப்பு நிதி**’’ என்பதற்கு, ஒரு குறித்த காலத்திற்கு வைத்துக் கொள்வதற்காக வங்கி பெற்றுக் கொள்கிற வைப்புத் தொகை என்றே அர்த்தமாகும். வைப்புத் தொகையை வைக்கும் நேரத்தில் விதிக்கப்படுகிற வட்டி விகிதத்தில் வட்டி கொடுக்கப்படுகிறது. கால வைப்பு நிதி (term deposit) என்பதில், காலாண்டு வாரியாக பணம் பெறும் வைப்புத் தொகை (Quarterly Payout Deposit), மாதாமாதம் பணம் பெறும் வைப்புத் தொகை (Monthly Payout Deposit) மற்றும் திரள் வைப்புத் தொகை (Cumulative Deposits) போன்றவை அடங்குகின்றன. சட்டம் அல்லது ஒழுங்குமுறை சட்டமைப்பு வழிகாட்டுதல்கள் குறிப்பாக தடை செய்தால் ஒழிய, அனைத்துத் தரப்பினருமே ஒரு கால வைப்புத்தொகை (*term deposit*) கணக்கைத் திறந்து கொள்ள தகுதியுடையவர்கள் தான்.
- ‘‘**ரெக்கரிங் டெப்பாசிட்**’’ என்பது, தொடர்ந்து நிலையான வருமானங்கள் உள்ளவர்கள் ஒவ்வொரு மாதமும் தங்களது ரெக்கரிங் டெப்பாசிட் கணக்கில் ஒரு நிலையான தொகையை டெப்பாசிட் செய்து, டெர்ம் டெபாசிட்டுகளுக்கு வழங்கப்படும் அதே வட்டி விகிதத்தில் வட்டியை சம்பாதித்துக் கொள்ள உதவும் ஓர் வைப்புக் கணக்காகும். இது, மாதத் தவணைகளில், உதாரணமாக, ஒவ்வொரு மாதமும் ரூ 1000 என்ற வகையில், ஒரு குறிப்பிட்ட தொகையை டெர்ம் டெப்பாசிட்கள் செய்வதைப் போன்றதாகும். இந்த டெப்பாசிட், ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படுகிற அனைத்துத் தவணைகளோடும் சேர்த்து, எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட தேதியில் முதிர்வடைகிறது. இவ்வாறாக, ஒரு நிலையான கால அளவில், ஒரு நிலையான தொகையை தொடர்ந்து மாதா மாதம் டெப்பாசிட் செய்வதன் மூலம், தங்களது சேமிப்புகளை அதிகரித்துக் கொள்வதற்கானதோர் வாய்ப்பினை, ரெக்கரிங் டெப்பாசிட் திட்டம் வழி செய்து தருகிறது.
- நிதி உள்ளடக்கத்திற்கான முன்முயற்சியின் ஒரு பகுதியாக, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) விதித்துள்ள நிதி உள்ளடக்கம் - வங்கிச் சேவைகளுக்கான அணுகல்’’ என்ற தற்போது நடப்பிலுள்ள வழிகாட்டுதல்களின் கீழ், எமது வங்கி ’’பேசிக் சேவிங்ஸ் பேங்க் டெப்பாசிட் அக்கவுண்ட் (பிஎஸ்பிடிஏ) ஸ்மால் அக்கவுண்ட்’’ ஆகிய வசதிகளை தனது அனைத்து வங்கிக் கிளைகளிலும் வழங்குகிறது. மேலும், ஒழுங்குமுறைகளின் படி, பிஎஸ்பிடிஏ ஸ்மால் அக்கவுண்டின் முக்கிய அம்சங்கள் கீழே சிறப்பாக விளக்கி காட்டபட்டுள்ளது

| அளவலகு | பிஎஸ்பிடிஏ | ஸ்மால் அக்கவுண்ட் |
|---|---|---|
| கேஒய்சி தேவை | • முழு கேஒய்சி | • தளர்த்திய கேஒய்சி |
| சிறப்பம்சங்கள் | • குறைந்த பட்ச இருப்புத் தொகைக்கான அவசியம் ஏதுமில்லை<br>• மாதத்திற்கு ரூ 1 லட்சம் என்ற வரம்பிற்கு உட்பட்டு, எண்ணற்ற இலவச பரிவர்த்தனைளுடன் கூடிய ரொக்க டெபாசிட்<br>• ஒரு மாதத்தில் கிளையிலிருந்து இலவசமாக 4 முறை பணம் எடுத்துக் கொள்ளும் வசதி<br>• கோட்டக் ஏடீஎம்-கள் அல்லாதவற்றில் இலவசமாக 5 பரிவர்த்தனைகள்<br>• அட்-பார் காசோலைப் புத்தகம்<br>• இலவச ஃபோன் பேங்கிங்<br>• நெட் பேங்கிங் (ஆப்ஷனல்) - ஒரு காலாண்டிற்கு ரூ 75 என்ற விகிதத்தில் கட்டணம் விதிக்கத்தக்கது | • குறைந்த பட்ச இருப்புத் தொகைக்கான அவசியம் ஏதுமில்லை<br>• ஒரு நிதியாண்டில் ரூ 1 லட்சம் என்ற வரம்பிற்கு உட்பட்டு, எண்ணற்ற இலவச பரிவர்த்தனைளுடன் கூடிய ரொக்க டெபாசிட்<br>• ஒரு மாதத்தில் கிளையிலிருந்து இலவசமாக 4 முறை பணம் எடுத்துக் கொள்ளும் வசதி<br>• கோட்டக் ஏடீஎம்-கள் அல்லாதவற்றில் இலவசமாக 5 பரிவர்த்தனைகள்<br>• அட்-பார் காசோலைப் புத்தகம்<br>• இலவச ஃபோன் பேங்கிங்<br>• நெட் பேங்கிங் வசதியில்லை |

| | | |
|---|---|---|
| கட்டுப்பாடுகள்/ வரம்புகள் | • மற்ற சேமிப்புக் கணக்குகளின் கீழ் அனுமதிக்கப்படுகிற மற்ற அனைத்துப் பரிவர்த்தனைகளும் அனுமதிக்கப்படுகின்றன பிஎஸ்பிடிஏ கணக்கு வைத்திருப்பவர், ஒரே நேரத்தில் வங்கியில் இன்னொரு கூடுதல் சேமிப்புக் கணக்கைத் திறக்க முடியாது. ஆயினும், சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு அப்கிரேடு செய்து கொள்ளலாம்.<br>• தற்போது சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் ஒருவர் பிஎஸ்பிடிஏ கணக்கைத் திறக்கிற பட்சத்தில், பிஎஸ்பிடிஏ கணக்கைத் திறந்த 30 நாட்களுக்குள் தற்போதுள்ள சேமிப்புக் கணக்கை மூடி விட வேண்டும். | • ஒரு நிதியாண்டில் உள்ள அனைத்து வரவுகளின் கூட்டுத்தொகை, ரூ100,000 -க்கு மேல் மிகக் கூடாது<br>• கணக்கில் உள்ள இருப்பு ரூ.50,000க்கு மேல் இருக்கக்கூடாது.<br>• ஒரு மாதத்தில் உள்ள அனைத்து பற்றுகளின் கூட்டுத்தொகை, ரூ 10, 000க்கு மேல் மிகக் கூடாது.<br>• அந்நிய நாட்டு பணப் பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்படுவதில்லை<br>• ஸ்மால் அக்கவுண்ட் வைத்திருப்பவர், ஒரே நேரத்தில் வங்கியில் கூடுதலாக இன்னொரு சேமிப்புக் கணக்கைத் திறக்க முடியாது. ஆயினும், அதனதன் கேஒசி தேவைகளை நிறைவேற்றி, பிஎஸ்பிடிஏ கணக்கிற்கு / மற்ற சேமிப்புக் கணக்கிற்கு அப்கிரேடு செய்து கொள்ளலாம்.<br>• தற்போது சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் ஒருவர் ஸ்மால் அக்கவுண்டைத் திறக்கிற பட்சத்தில், ஸ்மால் அக்கவுண்டைத் திறந்த 30 நாட்களுக்குள் தற்போதுள்ள சேமிப்புக் கணக்கை மூடி விட வேண்டும். |

- மதியிறுக்க நோய் (Autism) மூளை வாதம் (Cerebral Palsy), மன வளர்ச்சிக் குறைவு (Mental Retardation) மற்றும் பல்தரப்பட்ட ஊனங்கள் (Multiple Disabilities) ஆகியவை உள்ள நபர்களுக்கு, சட்டப்பூர்வ பாதுகாவலர் சான்று கொடுப்பதன் அடிப்படையில், நாங்கள் வங்கிக் கணக்கைத் திறந்து கொடுக்கிறோம். இந்த சான்றிதழ், 1987 ஆம் ஆண்டின் மனநல சட்டத்தின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தாலோ அல்லது மதியிறுக்க நோய் (Autism) மூளை வாதம் (Cerebral Palsy), மன வளர்ச்சிக் குறைவு (Mental Retardation) மற்றும் பல்தரப்பட்ட ஊனங்கள் (Multiple Disabilities) ஆகியவையுள்ள நபர்களுக்கான தேசிய அறக்கட்டளையின் 1999 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் அளவில் உள்ள குழுக்களாலும் வழங்கப்படுகிறது. அது போன்ற கணக்குகளைத் திறக்கத் தேவையான சான்றிதழுக்காக உள்ளூர் அளவில் உள்ள குழுக்களை, சட்டப்பூர்வ பாதுகாவலர்கள் அணுகலாம். உள்ளூர் அளவில் உள்ள குழுவின் முகவரியை, தேசிய அறக்கட்டளையின் வலைத்தளத்திலிருந்தோ (www.thenationaltrust.in) அல்லது உங்களுக்கு அருகாமையில் உள்ள ஒரு கிளையிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். மேலும் இத்தகைய நபர்களின் கணக்குகள், வாடிக்கையாளர் அவரது/அவளது சொந்த பணத்தை அவரே கையாள திறனுண்டு மற்றும் முடியும் என உறுதி செய்வதைப் பொறுத்து, ஒரு சட்டப்பூர்வ பொறுப்பாளர் நிலை சான்றிதழ் இன்றி துவக்கப்பட முடியும்.
- மேற்படி கணக்குகள் குறித்த அனைத்து விபரங்களும் எமது கிளைகள் அனைத்திலும் கிடைக்கின்றன மேலும் அவை எமது வங்கியின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.
- எந்தவொரு வைப்புநிதிக் கணக்கையும் திறப்பதற்கு முன்பாக, ஆர்பிஐ-ஆல் வழங்கப்பட்டுள்ள ''உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்'' (கேஒய்சி) (Know Your Customer'' (KYC)) வழிகாட்டுதல்களின் கீழ் அல்லது வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அதுபோன்ற மற்ற விதிகள் மற்றும் நடைமுறைகளின் கீழ் அவசியமாகிறபடியான உரிய கவனத்தை வங்கி எடுத்துக் கொள்ளும்.
- டெப்பாசிட் செய்ய வாய்ப்புள்ளவர்களுக்கு, வங்கி மூலமாக, கணக்கை திறப்பதற்கான படிவங்கள் வழங்கப்படும். டெபாசிட் செய்ய வாய்ப்புள்ளவர்கள், ஒரு வைப்பு நிதிக் கணக்கை திறப்பதற்காக வங்கியை அணுகும் போது, வங்கி அலுவலர்கள் நடைமுறை சார்ந்த செயல் முறைகளை விளக்கிச் சொல்லி, அவர்கள் நாடுகிற தேவையான விளக்கங்களை வழங்குவார்கள். டெப்பாசிட் செய்ய வாய்ப்புள்ளவர் கணக்குத் திறக்கும் படிவத்தை முழுமையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்ய வேண்டும்.
- சேமிப்புக் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு போன்ற வைப்புநிதித் திட்டங்களைப் பொருத்த வரையில், திறக்கப்படுகிற கணக்கின் வகையைப் பொருத்து, அது போன்ற கணக்குகளின் செயல்பாட்டை நிர்வகிக்கிற விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு பகுதியாக, ஒரு குறிப்பிட்ட, சராசரி காலாண்டு இருப்புத் தொகையைப் (ஏக்யூபி) (Average Quarterly Balance (AQB)) / சராசரி மாதாந்திர இருப்புத் தொகையைப் (ஏஎம்பி), பராமரிக்க வேண்டியிருக்கும். குறிப்பிட்ட அந்த ஏக்யூபி / ஏஎம்பி தொகையை கணக்கில் பராமரிக்கத் தவறினால், அதற்கு சராசரி காலாண்டு இருப்புத் தொகையை பராமரிக்காததற்கானதோர் கட்டணம் (Non Maintenance Charge (NMC)) விதிக்கப்படும்.
- கட்டணங்களின் திட்டம் இணையதளத்திலும் (www.kotak.com) அதே போல கிளை வளாகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.
- தகுதியுள்ள நபரும் / நபர்களும், ஒருசில ஸ்தாபனங்களும் / முகமைகளும் (இந்திய ரிசர்வ் வங்கியால் (ஆர்பிஐ) அவ்வப்போது விதிக்கப்படுகிற நிபந்தனைகளைத் பூர்த்தி செய்வதற்கு உட்பட்டு) சேமிப்பு வங்கிக் கணக்குகள் திறந்து கொள்ளலாம்.
- நடப்புக் கணக்குகளை, தனிநபர்களும் / கூட்டாண்மை நிறுவனங்களும் / தனியார் மற்றும் பொதுத்துறை வரையறுக்கப்பட்ட நிறுவனங்களும் / இந்து கூட்டுக் குடும்பமும் (எச்யூஎஃப்) / குறிப்பிடப்படுகிற சங்கங்களும் / சொசைட்டிகளும் / அறக்கட்டளைகளும், அது போன்றவையும் திறந்து கொள்ளலாம்.

- டெர்ம் டெப்பாசிட் கணக்குகளை, தனிநபர்களும் / கூட்டாண்மை நிறுவனங்களும் / தனியார் மற்றும் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களும் / இந்து கூட்டுக் குடும்பமும் (எச்யூஎஃப்) / குறிப்பிடப்படுகிற சங்கங்களும் / சொசைட்டிகளும் / அறக்கட்டளைகளும், அது போன்றவையும் திறந்து கொள்ளலாம்.

- ஒரு வைப்பு நிதி கணக்கை திறக்கையில், அவசியமாகிறபடியான உரிய கவனம் செலுத்தும் நடைமுறை என்பது, அந்த நபரின் அடையாளச் சான்றிதழை உறுதிப்படுத்துவது, அவரது முகவரியைச் சரிபார்ப்பது மற்றும் அவரது தொழில், செயல்பாட்டின் நிலை, வருமான ஆதாரங்கள் போன்றவற்றை உறுதிப்படுத்துவது போன்றவற்றை உள்ளடக்கியிருந்தாலும், டெபாசிட் செய்ய வாய்ப்புள்ள அந்த நபரை வங்கி அங்கீகரிக்கும் நபரிடம் இருந்து ஒரு அறிமுகத்தை வங்கி கோரலாம். அவசியமாகிறபடியான உரிய கவனம் செலுத்தும் நடைமுறையின் ஒரு பகுதியாக, கணக்குத் திறக்கிற / இயக்குகிற நபரின் / நபர்களின் ஒரு சமீபத்திய புகைப்படமும் வங்கிக்கு அவசியமாகிறது

- அவசியமாகிறபடியான உரிய கவனம் செலுத்தும் நடைமுறைத் தேவைகளுக்குக் கூடுதலாக, கேஒய்சி விதிகளின் கீழ், வங்கிக்கு நிரந்தரக் கணக்கு எண்ணோ (பான்) அல்லது இதற்கு மாற்றாக வருமான வரிச் சட்டம் / விதிகளின் கீழ் குறிப்பிட்டபடி, படிவம் எண் 60 அல்லது 61-ல் கொடுக்கப்படும் உறுதிமொழி அவசியமாகிறது.

- காலாந்திர இடைவெளிகளில், ஏற்கெனவே உள்ள வாடிக்கையாளர்களின் சுயவிவரத்தை மறுஆய்வு செய்யும் வேளையில், ஆர்பிஐ-ஆல் வரையறுக்கப்பட்டபடி, புதிய அல்லது கூடுதல் கேஒய்சி ஆவணங்கள் வேண்டுமென வங்கி கேட்கும்.

**தனியாக இயக்கும் கணக்கு**

அது போன்ற வைப்புநிதிக் கணக்குகள், 18 வயதிற்கு மேற்பட்டவராக உள்ள, ஒரு ஒற்றைத் தனிநபரே திறந்து கொண்டு, இயக்கலாம்.

**கூட்டுக் கணக்கு**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்களால், தங்களது சொந்தப் பெயர்களில் திறக்கிற வைப்புநிதிக் கணக்கு தான் கூட்டுக் கணக்கு என்று அறியப்படுகிறது.

**கூட்டுக் கணக்கின் செயல்பாடு**

ஒன்றுக்கும் மேற்பட்ட தனிநபர்களால் திறக்கப்பட்ட கூட்டுக் கணக்கை பின்வரும் முறைகளில் இயக்கலாம்.

**இருவரில் ஒருவர் அல்லது உயிருடன் இருப்பவர்**

இந்த முறை, இரண்டு தனி நபர்களின் பெயரில் வைத்திருக்கிற கணக்கிற்குப் பொருந்தக் கூடியது. இந்த முறையில், கணக்கை, கணக்கு வைத்திருக்கும் கணக்கு வைத்திருப்பவர்களில் எவருமோ அல்லது பிழைத்திருப்பவரோ (கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவர் மரணமடைந்து விடுகிற நிலையில் அல்லது புத்தி பேதலித்து போய்விடுகிற நிலையில்) இயக்கலாம்.

**யாராவது ஒருவர் பிழைத்திருப்பவர்**

இந்த முறை என்பது இரண்டுக்கும் மேற்பட்ட தனிநபர்கள் வைத்திருக்கிற கணக்கிற்குப் பொருந்தக் கூடியது. இந்த முறையில், கணக்கை, கணக்கு வைத்திருக்கும் கணக்கு வைத்திருப்பவர்களில் எவருமோ அல்லது பிழைத்திருப்பவரோ (கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவர் மரணமடைந்து விடுகிற நிலையில் அல்லது சுயநினைவில்லாமல் போய்விடுகிற நிலையில்) இயக்கலாம்.

**கூட்டாக**

இந்த முறையில், கணக்கு வைத்திருக்கும் அனைவரும் கையொப்பமிட்டிருக்கிற பட்சத்தில் மட்டுமே கணக்கை இயக்க முடியும்.

கணக்கை இயக்குவதற்கான உரிமைக்கட்டளை என்பது, கணக்கு வைத்திருக்கும் அவனைவரின் ஒப்புதலோடு மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

இயற்கையான பாதுகாவலர் / பதுகாவலரோடு கூட்டாக இளவரால் திறக்கப்படுகிற சேமிப்பு வங்கிக் கணக்கை, இயற்கையான பாதுகாவலர் மட்டுமே இயக்க முடியும்.

கூட்டுக் கணக்கை வைத்திருப்பவர்கள், மேற்படி கணக்கில் உள்ள இருப்புத் தொகையைக் கொடுப்பதற்கு பின்வரும் உரிமைக் கட்டளைகளில் எதையும் கொடுக்கலாம்:

- இருவரில் ஒருவர் அல்லது உயிருடன் இருப்பவர் கணக்கானது இரண்டு தனிநபர்களின் பெயரில் வைத்திருக்கிற பட்சத்தில், அவர்களை ஏ பி என வைத்துக் கொள்வோம், வட்டி ஏதுமிருக்குமானால் அதோடு கூடிய இறுதி இருப்புத் தொகை, கணக்கு வைத்திருப்பவர்களில் யாரேனும் ஒருவர் மரணமடைகையில், உயிருடன் இருப்பவருக்கு கொடுக்கப்படும்.
- யாரேனும் ஒருவர் அல்லது உயிருடன் இருப்பவர்(கள்): கணக்கை இரண்டு தனிநபர்களுக்கு மேற்பட்டவர்கள் வைத்திருக்கிற பட்சத்தில், அவர்களை ஏ, பி சி என வைத்துக் கொள்வோம், வட்டி ஏதுமிருக்குமானால் அதோடு கூடிய இறுதி இருப்புத் தொகை, கணக்கு வைத்திருப்பவர்களில் யாரேனும் இருவர் மரணமடைகையில், உயிருடன் இருப்பவருக்கு கொடுக்கப்படும்.
- முன்னவர் அல்லது உயிருடன் இருப்பவர்: முதலில் பெயரிடப்பட்ட கணக்கு வைத்திருப்பவரே தனியாக கணக்கை இயக்க முடியும், மேலும் அவருக்கே பணத்தின் மீது முழு உரிமைகளும் உள்ளன. முன்னவர் மரணமடைகையில் மட்டுமே உயிருடன் இருப்பவர் பொறுப்பிற்கு வருகிறார்.

- பின்னவர் அல்லது உயிருடன் இருப்பவர்: கடைசியில் பெயரிடப்பட்ட கணக்கு வைத்திருப்பவரே தனியாக கணக்கை இயக்க முடியும், மேலும் அவருக்கே பணத்தின் மீது முழு உரிமைகளும் உள்ளன. முன்னவர் மரணமடைகையில் மட்டுமே பிழைத்திருப்பவர் பொறுப்பிற்கு வருகிறார்.

**கூட்டாக கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்களை சேர்த்தல் அல்லது நீக்குதல்**

கூட்டாக கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவரின் வேண்டுகோளின் பேரில், கூட்டு கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்/களை சேர்க்கவோ அல்லது நீக்க வேண்டும் என்பது அவசியமாகிற சூழ்நிலை எழுகிற பட்சத்தில், அதற்கு வங்கி வழி செய்து கொடுக்கலாம் அல்லது தனியாக டெப்பாசிட் செய்துள்ள ஒரு நபர், இன்னொரு நபரின் பெயரை கூட்டாக கணக்கு வைத்திருக்கும் ஒருவராக சேர்த்துக் கொள்ள வழி செய்து கொடுக்கலாம்.

**இளவர் கணக்குகள்**

இளவரின் பெயரில் உள்ளதோர் கணக்கை, இயற்கையான பாதுகாவலர் திறந்து இயக்க முடியும். உரிய வயதை அடைகையில், முன்னர் இளவராக இருந்தவர், அவன்/அவள், தனது கணக்கில் உள்ள இருப்புத் தொகையை உறுதி செய்ய வேண்டும், மேலும் அந்தக் கணக்கை இயற்கையான பாதுகாவலர் / பாதுகாவலர் இயக்குகிற பட்சத்தில், இயற்கையான பாதுகாவலரால் முறையாக சரிபார்க்கப்பட்ட, முன்னர் இளவராக இருந்தவரின் புதிய மாதிரி கையொப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டு, உரிய வயதை அடைந்துவிட்ட இளவரின், உரிய கேஒய்சி ஆவணங்களோடு சேர்த்து அனைத்து கணக்கின் இயக்கம் சார்ந்த நோக்கங்களுக்காகவும் பதிவேட்டில் வைத்துக் கொள்ளப்படும்.

**கல்வியறிவில்லாத / கண்பார்வையற்ற நபரின் கணக்கு**

வங்கி, தனது விருப்புரிமையின் பேரில், கல்வியறிவில்லாத நபரின் நடப்புக் கணக்கு தவிர்த்த, வைப்புநிதிக் கணக்குகளைத் திறக்கலாம். அது போன்ற நபர்களின் கணக்கை, டெப்பாசிட் செய்பவர் மற்றும் வங்கி ஆகிய இருவருக்குமே தெரிந்த ஒரு சாட்சியோடு கூட, பணம் செலுத்துபவரே நேரடியாக வங்கிக்கு வரும் நிலையில் திறக்கலாம். சாதாரணமாக, அது போன்ற சேமிப்பு வங்கிக் கணக்குகளுக்கு காசோலைப் புத்தக வசதி எதுவும் வழங்கப்படுவதில்லை. வைப்புநிதித் தொகையை மற்றும் / அல்லது வட்டியை எடுக்கும் / திரும்பச் செலுத்தும் நேரத்தில், அந்த கணக்கு வைத்திருப்பவர் தனது பெருவிரல் ரேகையை அல்லது குறியை, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் முன்னிலையில் வைக்க வேண்டும், அவர் அந்த நபரின் அடையாளத்தை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். அக்கணக்கை நிர்வகிக்கிற விதிகள் மற்றும் நிபந்தனைகளை, வங்கி அலுவலர் அந்தக் கல்வியறிவில்லாத / பார்வையற்ற நபருக்கு விளக்கிச் சொல்வார்.

**அதிகாரப் பத்திரம்**

டெப்பாடிச் செய்பவரின் வேண்டுகோளின் பேரில், அவர் சார்பாக கணக்கை இயக்குவதற்கு இன்னொரு நபரை அதிகாரமளித்து, அவர் கொடுக்கிற உரிமைக் கட்டளையை / அதிகாரப் பத்திரத்தை வங்கி பதிவு செய்து கொள்ளும்.

**நாமினேஷன் வசதி**

தனிநபர்கள் திறக்கிற அனைத்து வைப்புநிதிக் கணக்குகளிலும் நியமன வசதி கிடைக்கிறது. ஒரு தனி உரிமையாளர் நிறுவனக் கணக்கிற்கும் நாமினேஷன் வசதி கிடைக்கிறது. நாமினேஷன் என்பதில் என்பது ஒரே ஒரு தனிநபரின் பெயரை மட்டுமே பரிந்துரைக்க முடியும். அப்படி செய்யப்பட்ட நாமிநேஷனை, எந்த நேரத்திலும் கணக்கு வைத்திருப்பவர் இரத்து செய்து கொள்ளலாம் அல்லது மாற்றிக் கொள்ளலாம். நாமினேஷன் செய்யும் வேளையில், அதனையடுத்து அதனை இரத்து செய்யும் வேளையில் அல்லது மாற்றும் வேளையில், அதனை ஓர் மூன்றாம் தரப்பினர் சாட்சியிட வேண்டும். நாமினேஷன் செய்ததை, கணக்கு வைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் ஒப்புதலின் பேரில் மாற்றியமைத்துக் கொள்ளலாம். நாமினேஷன் செய்யும் போது ஒரு இளவரின் பெயரையும் பரிந்துரைக்க முடியும். டெபாசிட் செய்பவர்/கள் மரணம் அடையும் பட்சத்தில் நிலுவையில் உள்ள தொகைகளை மற்றவர்களுக்கு எளிதாக திருப்பிக் கொடுக்க முடியும் என்பதால் அனைத்து தனிப்பட்ட வைப்பாளர்களும் நாமினேஷன் வசதியை உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. டெப்பாசிட் செய்தவர் மரணமடைந்து விடுகிற நிலையில், சட்டப்பூர்வ வாரிசுகளின் அறங்காவலராக அக்கணக்கில் நிலுவையிலுள்ள இருப்புத் தொகையை, நாமினேஷன் செய்யப் பெற்றவர் பெற்றுக் கொள்வார். ஒரு வைப்புநிதிக் கணக்கைத் திறக்கும் வேளையில், நாமினேஷன் வசதி குறித்த சாதகங்கள் டெப்பாசிட் செய்பவருக்குத் தெரிவிக்கப்படும். 2-வழி ஸ்வீப் வசதி வாயிலாகத் திறக்கப்படுகிற டெர்ம் வைப்புத் தொகைகளுக்கு, (ஆக்டிவ் மணி) சேமிப்பு / நடப்புக் கணக்கில் உள்ள நாமினேஷன் செய்யப்பட்டவர் பரிசீலிக்கப்படுவார்.

**காசோலைப் புத்தகங்கள் மற்றும் காசோலைகள்**

சேமிப்பு, நடப்பு அல்லது ஓவர்டிராஃப்ட் கணக்குகளை வைத்துள்ள நபர்களுக்கு, வங்கி சுட்டிக்காட்டக்கூடிய கட்டண விகிதங்களில், வங்கி மூலமாகக் காசோலைப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும். காசோலைப் புத்தகங்கள் வாடிக்கையாளருக்கு அவரது அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். சட்டத்திற்கிணங்க, ஒருசில வாடிக்கையாளர்களுக்கு 'அட் பார்' வசதி கொண்ட காசோலைப் புத்தகங்களை வங்கி தனது விருப்புரிமைக்கு ஏற்ப வழங்கலாம்.

நடப்பு, சேமிப்பு அல்லது ஓவர்டிராஃப்ட் கணக்கு வைத்துள்ள எந்த நபருக்கும், ஒரு நிதியாண்டின் போது, அந்நபரின் கணக்கில் போதுமான நிதியில்லாததன் காரணமாக ஒரு கோடி அல்லது அதற்கு மேலான தொகை மதிப்பு கொண்ட காசோலை நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட முறைத் செல்லாத காசோலையாக திருப்பி அனுப்பப்படுகிற பட்சத்தில், புதிதாகக் காசோலைகளை வழங்குவதை வங்கி மறுத்து விடலாம். மேலும், வங்கி தனது விருப்புரிமையின் பேரில், அந்நடப்புக் கணக்கை முடித்துக் கொள்வதைப் பரிசீலிக்கலாம்.

அடிக்கடி காசோலைகள் செல்லாததாக பணமின்றி மதிப்பிழந்தால் அல்லது / ஒரு மாதத்தில் வங்கி வரையறுத்த காசோலை உச்ச வரம்பை (தனிநபர் கணக்கு - 100 தாள்களை மிஞ்சினால், தனிநபர் அல்லாதது - 500 தாள்களை மிஞ்சினால்) மிஞ்சுகிற நிகழ்வில் காசோலைப் புத்தகத்தைக் கொடுப்பதை நிறுத்திக் கொள்வதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது.

காசோலையை வழங்கிய பிறகு அதனைத் திருத்துவதைத் தடுக்கிறதோர் வழியில் வாடிக்கையாளர்கள் காசோலையை வழங்க வேண்டும், மேலும் வாடிக்கையாளரின் கையொப்பம், வங்கியின் பதிவில் உள்ள கையொப்பத்தோடு ஒத்துப்போக வேண்டும். காசோலைகளில் உள்ள மாற்றம் எதுதற்கும், அது போன்ற ஒவ்வொரு மாற்றத்திற்கு எதிராகவும் அவ்வாடிக்கையாளர் அத்தாட்சிக் கையொப்பமிட வேண்டும். திருத்தம் எதையும், வங்கிப் பதிவேட்டில் உள்ள மாதிரிக்கு ஏற்ப முழு கையொப்பத்தின் கீழ் வாடிக்கையாளர் அதிகாரமளித்திருந்தால் ஒழிய, எந்த வழியிலும் திருத்தப்பட்டிருக்கிற காசோலைகளுக்குப் பணம் தர மறுப்பதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது.

**கணக்கு அறிக்கை**

சேமிப்பு வங்கிக் கணக்கு மற்றும் நடப்பு வைப்புநிதிக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு, கணக்கத் திறப்பதன் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப, சீரான கால இடைவெளிகளில் வங்கி ஒரு கணக்கு அறிக்கையை வழங்கும்.

**கணக்குப் புத்தக வசதி**

வாடிக்கையாளர் குறிப்பிட்டு கேட்டுக்கொள்ளும் வேண்டுகோளின் பேரில், அந்த தனி வாடிக்கையாளருக்கு கணக்குப் புத்தக வசதியை வங்கி அளிக்கிறது. கணக்குப் புத்தக வசதியப் பெற்றுக் கொள்கிற வாடிக்கையாளர்களுக்கு, கட்டணங்கள் குறித்த பொதுவான திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, கட்டணங்களோடு கணக்கு அறிக்கை வழங்கப்படும்.

**நேரடி பற்று மற்றும் நடப்பிலுள்ள அறிவுறுத்தல்கள்**

இது, தொடர்ச்சியாக பணப்பட்டுவாடா செய்யுமாறு, உ.ம்: ஒரு கணக்கிலிருந்து இன்னொரு கணக்கிற பணத்தை அனுப்புதல், லாக்கர் வாடகைகளை செலுத்துதல், கிரெடிட் கார்டு பணப்பட்டுவாடாக்கள், ஆயுள் காப்பீட்டு பணப்பட்டுவாடாக்கள், மற்றும் ஒரு நிர்ணயித்த பயனாளிக்கு சீரான கால இடைவெளியில் மற்ற பணப்பட்டுவாடாக்களை செய்தல் என்பது போன்று, ஒரு வங்கியாக எங்களை அறிவுறுத்த வாடிக்கையாளருக்கு வழிசெய்கிறதோர் பணப்பட்டுவாடா அமைப்பாகும். மேற்கொண்டும், இந்த வசதி, காசோலைகளை எழுவதில் உள்ள சிக்கல்களிலிருந்து விடுபட வாடிக்கையாளருக்கு உதவுகிறது.

இந்த சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு, உங்கள் நேரடிக் கழிப்பு உரிமைக் கட்டளையை, எங்களிடம் நீங்கள் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டியிருக்கும்.

**சராசரி காலாண்டு / மாதாந்திர இருப்புத் தொகை**

ஏக்யூபி - சராசரி காலாண்டு இருப்புத் தொகை (Average Quarterly Balance) என்பது, மூன்று நாட்காட்டி மாதங்களில், வாடிக்கையாளர் பராமரித்த சராசரி இருப்புத் தொகையைக் கொடுக்கிறது.

ஏஎம்பி - சராசரி மாதாந்திர இருப்புத் தொகை (Average Monthly Balance) என்பது, அந்த மாதத்தில், வாடிக்கையாளர் பராமரித்த சராசரி இருப்புத் தொகையைக் கொடுக்கிறது.

ஏக்புபி / ஏஎம்பி என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது AQB/AMB = மாதம் அல்லது காலாண்டிற்கான மொத்த இறுதி இருப்பு அந்தக் காலத்தின் நாட்களின் எண்ணிக்கையால் வகுக்கப்படும்

**சேமிப்புக் கணக்குகளில் வட்டி பட்டுவாடா**
சேமிப்புக் கணக்கின் மீது செலுத்தப்படும் வட்டியானது, திட்டத்தில் கூறியுள்ள படி அன்றாட இருப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

‘ஏப்ரல் 1, 2016 முதல், மார்ச், ஜூன், செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சேமிப்புக் கணக்கின் நிலுவைத் தொகையின் மீது கிடைக்கும் வட்டியானது காலாண்டு அடிப்படையில் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும்.‘

**சேமிப்பு கணக்கிற்கு கிடைக்கும் வட்டி வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**

| கணக்கில் உள்ள இருப்பு | வட்டி வீதம் |
|---|---|
| அனைத்து இருப்புகளுக்கும் | ஆண்டுக்கு 2.50% |

**<u>விளக்கம்:-</u>**

நாளின் இறுதியில் கணக்கு இருப்பு = ரூ. 55,00,000

அனைத்து இருப்புகளுக்கும் வட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது = ஆண்டுக்கு 2.50%

அன்றைய தினத்திற்கு வழங்க வேண்டிய வட்டி பின்வருமாறு கணக்கிடப்படும்:
(55,00,000 * 2.50% * 1/365)

*தற்போதைக்கு, சேமிப்புக் கணக்குகளில் வட்டி விகிதத்தை ஆர்பிஐ டீ-ரெகுலரைஸ் செய்துள்ளது, இது அவ்வப்போது மாறுதலுக்கு உட்பட்டது.

**டெர்ம் டெபாசிட்டுகளில் வட்டி பட்டுவாடா**
ஒரு நபர் வைத்திருக்கிற அனைத்துப் டெர்ம் டெபாசிட்களிலும் செலுத்திய / செலுத்த வேண்டிய மொத்த வட்டி, வருமான வரிச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள தொகையை விஞ்சுகிற பட்சத்தில், மூலத்திலேயே வட்டியை பிடித்தம் (TDS) செய்வதற்கான சட்டப்பூர்வக் கடமை வங்கிக்கு உள்ளது. வட்டி பிடிக்கப்பட்ட தொகைக்கு, டாக்ஸ் டிடெக்டட் அட் ஸோர்ஸ் சான்றிதழை (டீடிஎஸ் சான்றிதழ்) வங்கி வழங்கும். ஒரு டெப்பாசிட் செய்பவர், டீடிஎஸ் பிடிப்பதிலிருந்து விலக்கு பெற்றுள்ள பட்சத்தில், எந்தவொரு டீடிஎஸ் தொகையும் பிடித்தம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு, ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும், உரிய படிவத்தில் ஒரு உறுதிமொழியை அளிக்க வேண்டியிருக்கிறது.

ஆக்டிவ்மணி (2 வழி ஸ்வீப் டெப்பாசிட்கள்) திட்டத்திற்கு, மூத்த குடிமக்கள் / வங்கி ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து வாடிக்கையாளர்களுக்கும், வழக்கமான டெர்ம் டெபாசிட்டுகளின் விகிதங்களுக்கான வட்டி விகிதங்கள் பொருந்தும்.

டெர்ம் டெபாசிட் மீதான வட்டி, 181 நாட்கள் அல்லது அதற்கு மேல் குறைந்த பட்சக் கால அளவிற்கு, அவ்வைப்பு நிதியை வங்கியிலேயே வைத்திருக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு, மறுமுதலீடுகளின் நிலையில், காலாண்டுக்கு ஒரு முறை கூட்டப்படும் கூட்டு வட்டியில் கூட்டப்படும். 181 நாட்களுக்குக் கீழான கால அளவைக் கொண்ட டெர்ம் டெபாசிட்டுகளை பொருத்த வரையில், வட்டியானது முதிர்வுத் தேதியில் தனி வட்டியாகக் கணக்கிடப்படும்.

**டெர்ம் டெபாசிட்டுகளில் வட்டியைக் கணக்கிடும் முறை**

மாதாந்திர வட்டி கொடுக்கும் வாய்ப்பு மாதாந்திர வட்டி டீடி-க்கான வட்டி விகிதம், நியமன விகிதத்தை விட தள்ளுபடியில் செய்யப்படும்.

வைப்புநிதி வைத்த தேதியிலிருந்து, மாதாந்திர இடைவெளிகளில் வட்டி கொடுக்கப்படும். உதாரணமாக, பிப்ரவரி 15, 2008 அன்று செய்த ஒரு வைப்புநிதிக்கு, மார்ச் 15, 2008 அன்று வட்டி கொடுக்கப்படும்.

ஒரு லீப்-ஆண்டு அல்லாத ஆண்டில் டெபாசிட் செய்யப்படுகின்ற வைப்புத் தொகைகளுக்கு ஓர் ஆண்டில் உள்ள 365 நாட்கள் அடிப்படையிலும், ஒரு லீப் (காலண்டர்) ஆண்டில் செலுத்துகிற டெர்ம் டெபாசிட்தொகைகளுக்கு ஓர் ஆண்டில் உள்ள 366 நாட்கள் அடிப்படையிலுமே வட்டி கணக்கிடப்படுகிறது.

காலாண்டு வட்டி கொடுக்கும் வாய்ப்பு டெபாசிட் செய்யப்படுகின்ற தேயிலிருந்து காலாண்டு இடைவெளிகளில் வட்டி செலுத்தப்படும், உதாரணமாக, பிப்ரவரி 15, 2008 அன்று டெபாசிட் செய்யப்படுகின்ற ஒரு வைப்புநிதிக்கு, மே 15, 2008 அன்று வட்டி கொடுக்கப்படும்

ஒரு லீப்-ஆண்டு அல்லாத ஆண்டில் டெபாசிட் செய்யப்படுகின்ற வைப்புத் தொகைகளுக்கு ஓர் ஆண்டில் உள்ள 365 நாட்கள் அடிப்படையிலும், ஒரு லீப் (காலண்டர்) ஆண்டில் டெபாசிட் செய்யப்படுகின்ற டெர்ம் டெபாசிட்டுகளுக்கு ஓர் ஆண்டில் உள்ள 366 நாட்கள் அடிப்படையிலுமே வட்டி கணக்கிடப்படுகிறது.

திரள் வட்டி கொடுக்கும் வாய்ப்பில் (அதன் முதிர்வில்),திரள் வைப்பு நிதியின் கீழ் ,வட்டியானது காலாண்டுக்கு ஒருமுறை கூட்டப்படும் கூட்டு வட்டி வீதத்தில் கூட்டப்படுகிறது. அதாவது, காலாண்டில் ஈட்டிய வட்டியானது, அடுத்துவரும் காலாண்டில் வட்டியை கணக்கிடுவதற்காக அசல் தொகையுடன் கூட்டப்படுகிறது, காலாந்திர வட்டி கணக்கிடுவதற்கான சூத்திரம் என்பது, காலாண்டு வட்டி கொடுக்கும் வாய்ப்பிற்கானது போன்றதேயாகும்.

விளக்கம்

| காலாண்டு | அசல் தொகை | வட்டி | அடுத்த காலாண்டிற்கான அசல் |
|---|---|---|---|
| 1 | 100 | 2 | 102 |
| 2 | 102 | 2.04 | 104.04 |
| 3 | 104.04 | 2.08 | 106.12 |

வைப்புநிதி முதிர்வடையும் வரை, இதே முறையிலேயே அடுத்தடுத்த காலாண்டுகளுக்கான கணக்கீடு தொடரும். மேற்படி விளக்கம் என்பது டீடிஎஸ்-ன் தாக்கத்தைப் பரிசீலிக்காமல் கணக்கிடப்படும். வைப்புநிதிக் காலகட்டம் 181 நாட்கள் அல்லது இரண்டு காலாண்டுகளை விடக் குறைவானதாக இருக்கிற பட்சத்தில், வைப்புநிதிகளின் மீது திரள் வட்டி கொடுக்கப்படுவதில்லை.

**மூத்த குடிமக்கள் நிரந்தர வைப்புநிதிகள் (60 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல்)**

மூத்த குடிமக்கள் டெபாசிட் செய்கின்ற நிரந்தர வைப்புநிதிகளில், அவ்வப்போது அறிவிக்கப்படுகிறபடி ஓர் உயர் விகித வட்டியை வங்கி வழங்குகிறது. மூத்த குடிமக்கள் வைத்திருக்கிற நிரந்தர வைப்புநிதிகள் சம்பந்தமான, பொருந்துகிற வருமான வரி விதிகளுக்கு ஏற்பவும் வங்கி நடந்து கொள்ளும்.

**மூல வருமானத்தில் பிடித்தம் செய்தல் (டாக்ஸ் டிடெக்டட் அட் ஸோர்ஸ்)**

டெப்பாசிட் செய்தவருக்கு கொடுக்க வேண்டிய வட்டி, 1961 ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தில் குறிப்பிட்டபடி, அந்த நிதியாண்டின் போது, வரம்பைக் கடக்க வாய்ப்புள்ள நிலையில், டீடிஎஸ் பொருந்தும். தற்போது, இந்த வரம்பு ரூ. 40,000/- ஆகும். டீடிஎஸ் விகிதம் வருமான வரிச் சட்டத்தில் பரிந்துரைக்கப்படுகிறபடி இருக்கும்.

**டீடிஎஸ் பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு பெறுதல்**

வருமான வரிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு இணங்க, பின்வரும் படிவங்களை சமர்ப்பிப்பதன் மூலம், டீடிஎஸ் பிடித்தம் செய்வதிலிருந்து விலக்குப் பெற முடியும்.

படிவம் 15ஜி இது, டெப்பாசிட் செய்தவர் வரி செலுத்துவதற்கு கடமையுள்ளவராவதற்கு வாய்ப்பில்லை என்னவும், ஆகவே டீடிஎஸ் விதிவிலக்குப் பெற விரும்புகிறார் எனவும் சொல்லப்பட்டுள்ள ஒரு உறுதிமொழி ஆகும். படிவம் 15G என்பது, மூத்த குடிமக்கள் தவிர்த்து, ஒரு தனிமனிதர் அல்லது (ஒரு நிறுவனம் அல்லது ஸ்தாபனமாக இல்லாமலிருக்கிற) ஒரு நபருக்கு பொருந்தக் கூடியதாகும்.

படிவம் 15H இது, டெப்பாசிட் செய்தவர் வரி செலுத்துவதற்கு கடமையுள்ளவராவதற்கு வாய்ப்பில்லை என்னவும், ஆகவே டீடிஎஸ் விதிவிலக்குப் பெற விரும்புகிறார் எனவும் சொல்கிறதோர் உறுதிமொழி ஆகும். படிவம் 15H என்பது, மூத்த குடிமக்களாக உள்ள (அதாவது, அறுபத்தைந்து அல்லது அதற்கு மேலான வயதுடைய தனிநபர்களாகும்) இந்தியாவில் வசிக்கிற தனிநபர்களுக்குப் பொருந்தக் கூடியதாகும்.

வருமான வரி அலுவலரிடமிருந்து பெறுகிற விலக்கு சான்றிதழ் - படிவம் 15AA முந்தைய ஆண்டின் போது வரவு வைக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட அல்லது வரவு வைக்கப்படவிருக்கிற அல்லது கொடுக்கப்படவிருக்கிற, அந்தப் பிரிவில் குறிப்பிட்ட எந்த வருமானத்தின் தொகை / தொகைகளின் கூட்டும், வரி விதிக்கப்படாத அதிகபட்ச தொகையை விஞ்சுகிற பட்சத்தில், இப்பிரிவுகள் பொருந்தாது மேலும் வருமான வரிக்கணக்கை சமர்ப்பிப்பவர்கள் 15ஜி படிவத்தில் உறுதிமொழியை அமைத்துக் கொடுக்க தகுதியாக மாட்டார்கள். அது போன்ற நிலைகளில், வருமான வரி அலுவலரிடமிருந்து ஒரு குறிப்பான விலக்குக் கடிதத்தைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிற அறக்கட்டளைகள் / சொசைட்டிகள் போன்ற ஸ்தாபனங்களுக்கு, அந்த நிதியாண்டின் போது கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்படவிருக்கிற வட்டி, வரி விதிக்கப்படாத அதிகபட்ச தொகையைக் கடக்க வாய்ப்புள்ள பட்சத்தில், இந்தக் கடிதத்தை / படிவம் 15AA -ஐ சமர்ப்பிக்க வேண்டும்.

### டெர்ம் டெபாசிட்டை முதிர்வடைவதற்கு முன்பே எடுத்துவிடுதல்

உண்மையான முதிர்வுத் தேதிக்கு முன்பே, வைப்புத் தொகையை ஒரு வாடிக்கையாளர் பாதியாக / முழுமையாக எடுத்துக் கொள்ளலாம். முதிர்வதற்கு முன்பே எடுத்துக் கொள்கையில், வங்கியில் வைப்புத் தொகையை வைத்திருந்த காலத்திற்கு, டெப்பாசிட் செய்த தேதியில் நிலவுகிற வட்டி விகிதத்தில் அல்லது ஒப்பந்தம் செய்து கொண்ட விகிதத்தில், இதில் எது குறைவானதோ அந்த விகிதத்தில், 2012 நவம்பர் 1 ஆம் தேதி அன்று அல்லது அதற்குப் பிறகு புக் செய்த / புதுப்பித்த டெர்ம் டெப்பாசிட்களில் கீழுள்ளபடி, டெப்பாசிட்டை முன்னதாகவே எடுத்துக் கொள்வதன் மீது விதிக்கப்படுகிற உரிய அபராதத் தொகையைக் கழித்து, வட்டி கொடுக்கப்படும்.

டெர்ம் டெபாசிட்டின் அபராதக் கால அளவு
181 நாட்களுக்கும் குறைவாக ஒன்றுமில்லை
181 நாட்கள் மற்றும் அதற்கு மேல் 0.50%

உதாரணமாக, டெர்ம் டெபாசிட் தொகை ரூ. 15 லட்சங்கள் என வைத்துக் கொள்வோம், 1-2 ஆண்டுகளுக்கான வட்டி விகிதம் 10% எனவும், 2-3 ஆண்டுகளுக்கு அது 9.5% எனவும், ஒரு வாடிக்கையாளர் 2 ஆண்டுகள் 1 நாளுக்கு வைப்புத் தொகையை வைக்கிறார் என கணித்துக் கொள்ளுங்கள் (அதாவது 9.50%). அந்த வாடிக்கையாளர், அந்த டெர்ம் டெபாசிட் தொகையை 1 வருடத்திற்குப் பிறகு பணமாக்கிக் கொண்டால், வட்டியானது 9% சதவீத அளவில் கொடுக்கப்படும் (ஒப்பந்தம் செய்து கொண்ட விகிதத்தில் குறைவானது / வைப்புத் தொகையை வைத்திருந்த காலத்திற்குப் பொருந்துகிற விகிதம் மற்றும் அபராதக் கட்டணமாக 0.50% பிடித்தம்). முதிர்விற்கு முன்பே பாதித் தொகையை பணமாக்கிக் கொள்ளும் நிலையில், மீதமுள்ள தொகைக்கு, அசலாக வைப்புத் தொகையின் ஒப்பந்தத் தேதியில் நிலவிய வட்டி விகிதம் தொடர்ந்து கிடைக்கும்.

சேமிப்பு / நடப்புக் கணக்கோடு தொடர்புடைய, 181 நாட்கள் மற்றும் அதற்கு மேல் கால அளவைக் கொண்ட தனியான டெர்ம் டெபாசிட்கள், ரெகுலர் ஸ்வீப் டெப்பாசிட்-க்கு ஏற்ப நடத்தப்பட்டு, மேலுள்ளபடி செயல்பாட்டு மற்றும் அபராதக் கட்டணம் பொருந்தும்.

### டெர்ம் டெபாசிட்டுகளுக்கு பணம் செலுத்துதல் / புதுப்பித்தல்

முதிர்வு மற்றும் பணம் செலுத்துதல் அறிவுறுத்தல்கள் ஆகியவை, வைப்புத் தொகையை செலுத்தும் நேரத்தில் கட்டாயம் கொடுக்க வேண்டிய அறிவுறுத்தல்களாகும். வாடிக்கையாளருக்கு, வங்கியில் பராமரித்து வருகிற தனது நடப்பு / சேமிபு வங்கிக் கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது வங்கியில் பதிவு செய்து வைத்துள்ள தொடர்பு முகவரிக்கு வரைவோலை / வங்கி சலான்னை அனுப்பி வைக்குமாறு வேண்டுக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. வைப்பு நிதி வைதுள்ள காலத்தின் போது எந்த நேரத்திலும், முதிர்வு அறிவுறுத்தலை வாடிக்கையாளர் மாற்றிக் கொள்ளலாம். இத்தகைய அறிவுறுத்தல்கள் சேமிக்கப்பட்டு, முதிர்வு நேரத்தில் நிறைவேற்றப்படும்.

### டெர்ம் டெபாசிட்டுக்கு எதிராக அதிகப்பற்று

பருவகால வைப்புத்தொகைகளுக்கு எதிராக கடன் / அதிகப்பற்று வேண்டுமென்ற டெப்பாசிட் செய்திருப்பவர்களின் வேண்டுகோளை, தேவையான பாதுகாப்பு ஆவணங்களை பெற்ற பின்பு, வங்கி பரிசீலிக்கலாம். ஒரு இளவரின் பெயரில் உள்ள வைப்புத்தொகைக்கு எதிராக கேட்கும் கடனையும் வங்கி பரிசீலிக்கலாம், ஆயினும், அந்தக் கடன் அந்த இளவரின் நலனுக்காகத் தான் என்பதைச் சொல்கிற பொருத்தமானதோர் பிரகடனத்தை, டெப்பாசிட் செய்திருப்பவர் / விண்ணப்பதாரர் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது.

ரெக்கரிங் டெப்பாசிட்

**வட்டி கொடுத்தல்**

- இந்திய வங்கிகள் சங்கத்தால் ஆலோசனையளிக்கப்படுகிற முறைகளுக்கு ஏற்ப வங்கியால் ஆர்டி-களில் வட்டி கணக்கிடப்படும்.
- ஆர்டி-களுக்கான வட்டி விகிதங்கள், ஆர்டியை புக் செய்த தேதியில் உள்ளபடி, ஒரு டெர்ம் டெப்பாசிட்களுக்குப் பொருந்துகிற விகிதங்களுக்கு ஏற்றபடியே இருக்கும்.
- ஆர்டி மீது கொடுக்கிற வட்டி, காலாண்டுக் கால அளவுகளில் கூட்டு வட்டியாக, பொருந்துகிற விகிதங்களில் கணக்கிடப்படுகிறது.

**தவணைகளைச் செலுத்துதல்:**

- தவணைத் தொகையை நிர்ணயித்த பிறகு அதனை பின்னொரு தேதியில் மாற்றிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.
- ஒரு தவணைக்கும் மேலான தவணைகள் செலுத்தப்படாமல் இருக்கிற பட்சத்தில், செலுத்திய தவணை ஒரு தவணைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிற பட்சத்தில், அந்த முதல் / முந்தைய தவணை செலுத்தாமல் உள்ளதன் பேரிலெயே வரவு வைத்துக் கொள்ளப்படும்.
- பாதித் தவணை செலுத்துவது / தவணையை முன்கூட்டியே செலுத்துவது அனுமதிக்கப்படாது.
- வாடிக்கையாளர்கள் தங்களது கணக்கில், தவணைகளைச் செலுத்துவதற்குப் போதுமான மீதத்தொகையைப் பராமரித்துக் கொள்ள வேண்டும் என்ற தகவலைத் தெரிவிப்பதற்கு வங்கி பொறுப்பாகாது.

**தகுதி:**

- உள்நாட்டில் வசிக்கும் தனிநபர்கள் (இளவர்கள் உட்பட) மற்று இந்து கூட்டுக் குடும்பம் (HUF):

முதிர்வு

- ஒப்பந்தக் காலத்தை நிறைவு செய்வதன் பேரில், செலுத்துவதற்கு தவணைகள் இருக்கின்றன என்கிற போதிலும், அது போன்ற செலுத்தாத தவணைகளுக்குப் பொருந்துகிற அபராத வட்டி விகிதங்களைக் கழித்த பிறகு, அவ்வைப்புத்தொகை முதிர்வை அடையும்.

- ஒரு மாதத்திற்குள்ளாகவே இந்த வைப்பு நிதியை உரிய காலத்திற்கு முன்பே முடித்துக் கொள்கிற நிலையில், வட்டி எதுவும் கொடுக்கப்படாது மேலும் அசல் தொகை மட்டுமே திருப்பிக் கொடுக்கப்படும்.
- ஆர்டி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முதிர்வுத் தொகை, அனைத்துத் தவணைகளையும் உரிய நேரத்தில் செலுத்துவதற்கு உட்பட்டது.

**தவணைகளைச் செலுத்துவதில் ஏற்படுகிற தாமதத்தில் விதிக்கப்படுகிற அபராதம்:**

- 5 நாட்கள் என்ற சலுகை காலத்திற்குப் பிறகும், பணம் செலுத்துவதில் ஏற்படுகிற தாமதம் எதற்கும், ஆர்டி வட்டி விகித விகிதத்தில் அபராத வட்டி (ஆர்டி-யை புக் செய்த நேரத்தில் உள்ள ஒப்பந்த வட்டி விகிதம்) + ஆண்டிற்கு 2% அல்லது வங்கி அவ்வப்போது விதிக்கிற அது போன்ற மற்ற விகிதத்தில், தாமதமான மாதத்திற்கு விதிக்கப்படும்.

- அது போன்ற வட்டியைக் கணக்கிடுவதற்கு, ஒரு மாதத்தின் மீதப்பகுதி எதுவும் முழு மாதமாகவே கணக்கிடப்படும்.

- அந்த மாதத்திற்குச் செலுத்திய பணம் வரவு வைக்கப்பட்டிருக்கிற பட்சத்திலும், அந்தத் தவணையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான நிலை அறிவுறுத்தல் தோல்வியடைகிற பட்சத்தில், பொதுவான அம்சங்கள் மற்றும் கட்டண விகிதங்களின் படி (General Features and Schedule of Charges (GFSC)) நடப்பு / சேமிப்பு வங்கிக் கணக்கிலிருந்து ஒரு நிலை அறிவுறுத்தல் தோல்விக் கட்டணம் பிடித்தம் செய்யப்படும்.

- விதிக்கப்படக்கூடிய மொத்த அபராத வட்டி, வங்கி செலுத்தக்கூடிய வட்டியின் மொத்தத் தொகையிலிருந்து மீட்டெடுக்கப்படும் மேலும் அது அத்தொகை முதிர்வின் நேரத்தில் அல்லது கணக்கை உரிய காலத்திற்கு முன்பே முடித்துக் கொள்ளும் நேரத்தில் மட்டுமே, அந்தந்த நிலைக்கு ஏற்ப மீட்டெடுக்கப்படும்.

**ஆர்டி-யை முதிர்வடைவதற்கு முன்பே எடுத்துவிடுதல்:**

- ஒரு மாதத்திற்குள்ளாகவே இந்த வைப்பு நிதியை உரிய காலத்திற்கு முன்பே முடித்துக் கொள்கிற நிலையில், வட்டி எதுவும் கொடுக்கப்படாது மேலும் அசல் தொகை மட்டுமே திருப்பிக் கொடுக்கப்படும்.
- ஆர்டி-யை முதிர்வடைவதற்கு முன்பே எடுக்கையில். வங்கியில் வைப்புத் தொகையை வைத்திருந்த காலத்திற்கு, அப்போது நிலவுகிற விகிதத்தில் அல்லது ஒப்பந்தம் செய்து கொண்ட விகிதத்தில், இதில் எது குறைவானது அந்த அளவில், வைப்புத் தொகையை உரிய காலத்திற்கு முன்பே விலக்கிக் கொள்வதன் மீது விதிக்கப்படுகிற 0.5% கட்டணத்தைப் பிடித்த பின் வட்டி கொடுக்கப்படும்.

இந்தியா எங்கிலும், அந்நியச் செலாவணியில் ஈடுபடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட, தேர்ந்து எடுத்த கிளைகளில் (பி வகை) அந்நிய செலாவணி சேவைகள் அளிக்கப்படுகின்றன.

- பயணிகள் காசோலை (TC)
- அந்நிய நாணய பணம் கொள்முதல் / விற்பனை
- வயர் டிரான்ஸ்ஃபெர்
- வரைவோலைகள்

**பயணிகள் காசோலைகள்**
தற்போது, பின்வரும் நான்கு முக்கிய  நாணயங்களில் பயணிகள் காசோலைகளை வங்கி வழங்குகிறது, அதாவது, அமெரிக்க டாலர், கிரேட் பிரிட்டன் பவுண்டு, ஜப்பானிய யென் மற்றும் யூரோ, வெளிநாட்டிற்கு செல்லும் வேளையில் வாடிக்கையாளர்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். அது போன்ற பயணிகள் காசோலைகளை வழங்குவது, அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் FEMA/RBI ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி நடப்பதற்கு உட்பட்டது.

**காசோலைகள்**
எமது வாடிக்கையாளராக, நீங்கள் அனைத்து நாணயங்களிலும் காசோலைகளை டெப்பாடிட் செய்யலாம். கீழுள்ள முகவரிக்கு, உங்கள் கோட்டக் மஹிந்திரா வங்கிக் கணக்கின் பெயரில், ஒரு வரைவோலை அல்லது காசோலையை அஞ்சலில் அனுப்பி வையுங்கள் போதும், உங்கள் வெளிநாட்டு வங்கியிலிருந்து நாங்கள் நிதியை வசூலித்து அதனை உங்கள் கணக்கில் வரவு வைத்து விடுவோம். என்ஆர்ஐ சேவை மையம், கோட்டக் மஹிந்திரா வங்கி லிட், 5வது தளம், வினய் பாவ்யா காம்ப்ளெக்ஸ், சி. எஸ். டீ. ரோடு, சாந்தாகுரூஸ் கிழக்கு, மும்பை - 400 098, இந்தியா. காசோலை மீது நடவடிக்கை எடுத்து அதனை உங்கள் கணக்கில் வரவு வைப்பதற்கு எங்களுக்கு ஆகும் காலம் என்பது, அந்த நாணயத்தின் வகை மற்றும் நாடு / அந்த காசோலை எடுக்கப்பட்டிருக்கிற இடம் ஆகியவற்றைப் பொருத்து, எமது நாஸ்ட்ரோ கணக்கில் அந்த வரவு காணப்பட்ட தேதியிலிருந்து 6 முதல் 21 நாட்களாக இருக்கும்.

**அந்நிய நாணய பணம்**
அந்நிய நாணயப் பணம், ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்கு, அமெரிக்க டாலர், யூரோ, கிரேட் பிரிட்டன் பவுண்டு, ஜப்பானிய யென், கனடா டாலர் மற்றும் ஆஸ்திரேலிய டாலர் ஆகியவற்றில் கிடைக்குமாறு செய்யப்படுகிறது. விற்பனை செய்யப்படுகிற அந்நிய நாணயத்தின் தொகை என்பது அவ்வப்போது ஆர்பிஐ-ஆல் விதிக்கப்படுகிற விதிகளுக்கு ஏற்பவே இருக்கிறது.

**அந்நிய நாணய வரைவோலைகள்**
பின்வருபவை போன்ற நோக்கங்களுக்காக, எஃப்ஈஎம்ஏ-விற்கு ஏற்ப அந்நிய செலாவணி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்குப் பணம் செலுத்துவதற்காக, அந்நிய நாணய வரைவோலை வசதியைப் பெற்றுக் கொள்ளலாம்:

- ஒரு நண்பர் அல்லது உறவினருக்குப் பரிசாக பணம் கொடுப்பது
- டோஃபெல், ஜிமேட் போன்ற பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்கு விண்ணப்பக் கட்டணங்களை செலுத்துதல்.
- வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகக் கட்டணங்களை செலுத்துதல்
- வெளிநாட்டில் செய்து கொள்கிற மருத்துவ சிகிச்சைக்குப் பணம் செலுத்துதல்
- ஆர்பிஐ வழிகாட்டுதலுக்கு ஏற்ப வேறு ஏதேனும் அனுமதிக்கப்பட்ட நோக்கம்

அந்நிய நாணய வரைவோலைகள், எமது வங்கிக் கிளைகளில் நான்கு நாணயங்களில் வழங்கப்படுகின்றன: அமெரிக்க டாலர்கள் (USD), கிரேட் பிரிட்டன் பவுண்டுகள் (GBP), யூரோ மற்றும் ஜப்பானிய யென் (JPY).

**ஃபிஷ்ஷிங்:**
இது, ஒரு வலைத்தளத்தில் முக்கியமான மற்றும் இரகசியமான தகவல்களை வஞ்சகமாகப் பெறும் ஒரு குற்றச் செயலை விவரிப்பதற்காக உபயோகிக்கப்படுகிற சொல் ஆகும். ஒரு நம்பகமான அமைப்பு போலவே போலித் தோற்றமளிக்கும் வகையில் வடிவமைக்கப்படுகிற வலைத்தளங்களில், பயனர் பெயர்கள், கடவுச் சொற்கள், கணக்கு விபரங்கள், கிரெடிட் கார்டு எண்கள் போன்ற இரகசியமான தகவல்களைத் தெரிவித்து விடும் வகையில் பயனர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

ஃபிஷ்ஷிங்கிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உதவிக் குறிப்புகள்:

- உங்கள் பிரவுசரின் முகவரிப் பட்டியில், எமது யூஆர்எல், www.kotak.com என்பதை எப்போதுமே தட்டச்சு செய்வதன் மூலமாகவே வங்கியின் வலைத்தளத்திற்குள் நுழையுங்கள்.
- மின்னஞ்சல் வழியாக தனிப்பட்ட தகவல்கள் வேண்டுமெனக் கோருகிற வேண்டுகோள் எதற்கும் பதிலளிக்காதீர்கள்.
- எமது வலைத்தளத்திற்கு வருகை தருகையில், உங்கள் பிரவுசரின் அடிப்பாகத்தில் எப்போதுமே ஒரு பாட்லாக் (பூட்டு) அடையாளம் இருக்கிறதா எனப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- முறையற்ற உபயோகம் எதையும் உங்களுக்கு அருகாமையில் உள்ள கிளையைத் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ, அல்லது எமது 24 மணி நேர வாடிக்கையாளர் தொடர்பு மையத்தை அழைப்பதன் மூலமாகவே எங்களுக்கு அறிவியுங்கள். முறையற்ற உபயோகம் குறித்த சந்தேகத்திற்கிடமான நிலை எதையும், ஒரு மின்னஞ்சலை எங்கள் bank@kotak.com முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் எங்களுக்கு அறிவிக்கலாம்.

**ஸ்பூஃபிங்:**
இது, சட்டவிரோதமாக முக்கியத் தகவல்களை அணுகுவதற்காக, மோசடியாக ஆள்மாறாட்டம் செய்யும் ஒரு செயலை விவரிப்பதற்காக உபயோகிக்கப்படுகிற சொல் ஆகும். ஒரு மின்னஞ்சல் ஸ்பூஃப் என்பது, மின்னஞ்சல் மூலமாக இரகசியமான தகவல்களைக் வெளியிட செய்ய பயனரை ஏமாற்றுவதற்காக, அசலான அனுப்புநரை மறைத்து, அத்தாட்சி பெற்ற நம்பிக்கைக்குறிய நபர் போலவே பொய்வேஷம் போடுகுவதற்காக வடிவமைக்கப்படுகிறதோர் யுக்தியாகும். உதாரணமாக, அந்த மின்னஞ்சல் சட்டப்பூர்வ முகவரியிலிருந்து வந்தது போலவே தோன்றுகிற அதே வேளையில், பதிலளிப்பு முகவரியில், உண்மையான மோசடி அனுப்புநரின் முகவரியிருக்கலாம். ஒரு வலைத்தள ஸ்பூஃப் என்பது, ஒரு வஞ்சிக்கும் செயலாகும், அதில் ஒரு மோசடியான ஸ்தாபனத்தால், ஒரு ஒரு பிரபலமான நன்கு வலைத்தளம் போலியாக அமைக்கப்பட்டு, பயனர்களை ஏமாற்றி அவர்களுடைய முக்கியமான தகவல்களை பகிரவைக்கின்றது.

ஸ்பூஃபிங்கிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உதவிக் குறிப்புகள்:

- ஒரு மின்னஞ்சல் வழியாக, உங்கள் தனிப்பட்ட தகவல்களை அனுப்பி வைக்குமாறு வேண்டிக்கொண்டு, கோட்டக் மஹிந்திரா வங்கி ஒரு போதும் உங்களுக்கு மின்னஞ்சல் எதையும் அனுப்புவதில்லை.
- தனிப்பட்ட, நிதிசார்ந்த அல்லது பாதுகாப்புத் தகவல்களைக் கேட்கிற எந்தவொரு மின்னஞ்சலுக்கும் ஒரு போதும் பதிலளிக்காதீர்கள்.
- அது போன்றதோர் மின்னஞ்சலில் உள்ள எந்த இணைப்பையும் ஒருபோதும் கிளிக் செய்யாதீர்கள்.
- உங்களுக்கு தீங்கிழைக்கும் வண்ணம் மின்னஞ்சல் எதுவும் அனுப்பப்பட்டிருப்பதாக நீங்கள் சந்தேகம் கொள்கிற நிலையில், தயவுசெய்து அதனை உங்களுக்கு அருகாமையில் உள்ள கிளைக்கு அறிவியுங்கள், அல்லது எமது 24 மணி நேர வாடிக்கையாளர் தொடர்பு மையத்தை அழையுங்கள். முறையற்ற உபயோகம் குறித்த சந்தேகத்திற்கிடமான நிலை எதையும், ஒரு மின்னஞ்சலை எங்கள் bank@kotak.com <mailto:bank@kotak.com> முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் எங்களுக்கு அறிவிக்கலாம்.

**விஷ்ஷிங்:**
விஷ்ஷிங் என்பது சட்ட விரோதமாக இரகசியமான தகவல்காளுக்கான அணுகலைப் பெற்றுக் கொள்வதற்காக VoIP(வாய்ஸ் ஓவர் இண்டெர்நெட் புரோட்டோகால்)-ஐ உபயோகிக்கிறது என்பதைத் தவிர, மற்றபடி ஃபிஷ்ஷிங் செய்வதைப் போன்றதே. சாதாரணமாக, ஒரு மோசடி நபரால் ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு குரல் அழைப்பு செய்யப்படுகிறது, அவ்வழைப்பு, ஐவிஆர் (இண்டெராக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ்) போன்றதோர் தொலைபேசி அழைப்பு போல, தனிப்பட்டதாகவோ, நிதி சார்ந்ததாகவோ அல்லது பாதுகாப்பு தொடர்பானதாகவோ இருக்கக் கூடிய முக்கியமான தகவல்களை தெரிவிக்கச் செய்யுமாறு வாடிக்கையாளரை ஏமாற்றுகிறது.

விஷ்ஷிங்கிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உதவிக் குறிப்புகள்:

- கோட்டக் மஹிந்திரா வங்கியிலிருந்து வருவது போல் காண்பிக்கிற எவருக்கும், ஒருபோதும் உங்கள் கடவுச் சொல்லை அல்லது PIN எண்ணைக் தெரிவிக்காதீர்கள் அல்லது வெளியிடாதீர்கள் . எந்தவொரு கோட்டக் வங்கி ஊழியருமே உங்கள் கடவுச் சொல் அல்லது PIN எண்ணை உங்களிடம் கேட்க மாட்டார்கள் என்பதை தயவுசெய்து ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களை பேசும்படி வழிநடத்தும் எந்தவொரு தொலைபேசி அமைப்பிலும், தனிப்பட்ட அல்லது கணக்கு தொடர்பான தகவல்கள் எதையும் பகிரவேண்டாம்.
- ஒரு தீங்கிழைக்கும் அஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களை, அந்த எண்ணிற்கு எந்தவொரு அழைப்பையும் நீங்கள் செய்வதற்கு முன்பாக, தயவுசெய்து கோட்டக் வங்கியின் 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை எண்களோடு சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- கோட்டக் வங்கியின் எண் என்பதாக பதிவிடப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட எண்ணில் உங்களை அழைக்கச் சொல்லிக் கேட்டு, உங்களுக்கு தீங்கிழைக்கும் வண்ணம் ஒரு மின்னஞ்சல் எதுவும் அனுப்பப்பட்டிருப்பதாக நீங்கள் சந்தேகம் கொள்கிற நிலையில், தயவுசெய்து அதனை உங்களுக்கு அருகாமையில் உள்ள கிளைக்கு அறிவியுங்கள், அல்லது எமது 24 மணி நேர வாடிக்கையாளர் தொடர்பு மையத்தை அழையுங்கள். முறையற்ற உபயோகம் குறித்த சந்தேகத்திற்கிடமான நிலை எதையும், ஒரு மின்னஞ்சலை எங்கள் bank@kotak.com முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் எங்களுக்கு அறிவிக்கலாம்.

**பொதுவான நெட்-பேங்கிங் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்:**

- உங்கள் தனிப்பட்ட அடையாள எண்ணை (PIN) ஒருபோதும் எழுதாதீர்கள் – அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். PIN எண்களை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம். உங்கள் PIN அல்லது பயனர் ஐடி அல்லது கடவுச்சொல்லைப் பகிர்வதால் ஏற்படும் இழப்புகளுக்கு கோடக் மஹிந்திரா வங்கி பொறுப்பேற்காது.
- PIN ஐத் தேர்ந்தெடுக்கும்போது, எளிதில் அடையாளம் காணக்கூடிய எண்கள் மற்றும் எழுத்துக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டாம். உங்கள் பெயரின் முதலெழுத்துகள், தொலைபேசி எண்கள் அல்லது பிறந்த தேதிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- பரிவர்த்தனை குறித்த விழிப்பூட்டல்களை உங்களுக்கு அனுப்பி வைக்கிற மின்னஞ்சல் மற்றும் எஸ்எம்எஸ் அலர்ட் வசதிகளை கோட்டக் மஹிந்திரா வங்கி வழங்குகிறது. எப்போதுமே அது போன்ற விழிப்பூட்டும் செய்திகளை - வங்கியால் அனுப்பி வைக்கப்படுகிற மின்னஞ்சல் / எஸ்எம்எஸ் - அழிக்காமல் வைத்துக் கொள்ளுங்கள், அவை உங்கள் நிதிகளைக் கண்காணித்து, தவறாக உபயோகிக்கப்படுவது எதையும் தவிர்த்துவிட உதவிபுரியும்.
- உங்கள் நெட் பேங்கிங் கடவுச் சொல்லின் பாதுகாப்பு அத்துமீறப்பட்டிருப்பதாக உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டாலோ அல்லது டெபிட் கார்டு தொலைந்து போனாலோ, தயவுசெய்து எங்களது 24 மணி நேர வாடிக்கையாளர் தொடர்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**டெபிட் கார்டு மற்றும் ஏடீஎம் தொடர்பான பாதுகாப்பு உதவிக் குறிப்புகள்:**

- ஒரு போதும் உங்கள் தனிப்பட்ட அடையாள எண்ணை (PIN), உங்கள் அட்டையின் பின்பக்கத்தில் எழுதி வைக்காதீர்கள் அல்லது அந்த PIN எண்ணை யாருக்கும் சொல்லாதீர்கள் - அதனை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்!
- முதன் முதலாக ஏடீஎம் உபயோகிக்கையில், உங்கள் PIN எண்ணை மாற்றி விடுங்கள் மேலும் பிறந்த தேதிகள், தொலைபேசி எண்கள் போன்ற எண்களைத் தேர்ந்தெடுக்காதீர்கள்.
- உங்கள் கார்டை நீங்கள் பெற்றுக் கொண்டதும், அதன் கையொப்பப் பட்டியில் உங்கள் கையொப்பத்தை இட்டு விட்டீர்களா என்பதைப் சரி பார்த்துக் கொள்ளுங்கள். கார்டுகள் தொலைந்து போனாலோ அல்லது திருடு போனாலோ அதை தெரிவிப்பதற்காக, கார்டின், கணக்கு எண்கள் மற்றும் தொலைபேசி எண்களைப் பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பட்டியலை ஒரு பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்.
- ஒவ்வொரு முறை பொருள் வாங்கிய பிறகும் உங்கள் கார்டை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மறக்காதீர்கள்
- கார்டு எண்களை ஒரு போதும் தொலைபேசியில் கொடுக்காதீர்கள்.
- விற்பனை இரசீதில் கையொப்பமிடுவதற்கு முன்பாக, எப்போதுமே பரிவர்த்தனைத் தொகையை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- இரசீதின் வாடிக்கையாளர் நகலில் உள்ள தொகை, விற்பனையாளர் நகலில் பதிவாகியுள்ள தொகையோடு பொருந்துகிறது என்பதை சரிபார்க்க விற்பனை வவுச்சர்களை எப்போதும் சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் காரின் குளோவ் கம்பார்ட்மெண்டில் கார்டுகளை விட்டுச் செல்லாதீர்கள்.
- எப்போதுமே உங்கள் PIN எண்ணையும், பரிவர்த்தனைத் தொகையையும் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள், மேலும் சந்தேகத்திற்கு இடமான எதையும் நீங்கள் காண்பீர்களானால், உடனடியாக உங்கள் பரிவர்த்தனையை இரத்து செய்து விட்டு, அந்த இடத்தை விட்டுச் சென்று விடுங்கள்.
- ஒரு ஏடீஎம் பரிவர்த்தனையை நிறைவு செய்த பிறகு, உங்களது கார்டையும், பரிவர்த்தனைப் பதிவையும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் - உங்கள் இரசீதை விட்டுச் செல்லாதீர்கள். அதனை உங்கள் மாதாந்திர அறிக்கைகளோடு சோதித்துப் பாருங்கள்.
- ஏடீஎம் அறையில் நின்று கொண்டிருக்கும் வேளையில் உங்கள் பணத்தை எண்ணாதீர்கள் - உடனடியாக உங்கள் பணம், கார்டு மற்றும் இரசீதை உடனடியாக அதை பத்திரமாக உள்ளே வைத்துக் கொள்ளுங்கள் .
- உங்களுக்குப் பிறகு ஏடீஎம்-ஐ உபயோகிக்கக் காத்திருக்கும் எவரும், உங்கள் PIN அல்லது நீங்கள் பதிவு செய்கிற பரிவர்த்தனைத் தொகை ஆகியவற்றைப் பார்க்க முடியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.
- ஏடீஎம் மெஷினிலிருந்து உங்கள் கார்டை திரும்ப எடுக்க முடியவில்லை என்றால், உதவி செய்ய வருகிற எவரையும், அவர்கள் வங்கியின் பாதுகாப்பு அலுவலராக இருந்தலும் கூட, அவர்களை சந்தேகக் கண் கொண்டு பாருங்கள். அந்நியர்களிடமிருந்து கிடைக்கும் உதவியை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.
- உங்கள் டெபிட் கார்டு தொலைந்து போய் விட்டதாக நீங்கள் சந்தேகம் கொள்கிற பட்சத்தில், தயவுசெய்து எமது 24 மணி நேர வாடிக்கையாளர் தொடர்பு மையத்தை உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருக்கிறதென்றால், தயவுசெய்து எமது 24-மணி நேர வாடிக்கையாளர் மையத்தை அழையுங்கள் அல்லது bank@kotak.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள், நாங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியோடு உதவி செய்வோம்.

**உள்நாட்டிற்குள் பணம் செலுத்துதல்**

**வரைவோலைகள் (DD)/ வங்கிக் காசோலை (BC):**

**வரைவோலைகள்:** ஒரு வரைவோலை என்பது பணத்தை பட்டுவாடா செய்யப் பயன்படும் ஒரு ஆவணம். இது ஒரு மாற்று முறையாவணம் (Negotiable instrument) அல்லது எழுத்துப் பூர்வமானதோர் ஆணையாகும். வங்கி தனது சொந்தக் கிளைகளிலும், வங்கியின் தொடர்புக் கிளைகளிலும் வரைவோலைகளை வழங்குகிறது, இதற்கப்பால், தொடர்பு வங்கி அமைவிடங்கள் உள்ளதைத் தவிர்த்து மற்ற அமைவிடங்களில் எடுக்கப்பட்ட வரைவோலைகளுக்கு உள்ளூர் வங்கிக் கிளைகளோடு வரைவோலை எடுக்கும் ஏற்பாடுகளை கொடுப்பதன் மூலமும் வரைவோலைகளைக் கொடுக்கிறது.

**வங்கிக் காசோலைகள்:** உள்ளூரில் நிதிகளை செலுத்துவதற்காக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிற வசதி. வங்கிக் காசோலை, அதனைக் கொடுக்கிற வங்கியிலேயே எடுத்து அங்கேயே காசாக்கப்படுகிறது.

டிடி-கள் / பிசி-கள் வழங்குவதற்கான கட்டணங்கள், கட்டணங்கள் குறித்த பொதுவான அட்டவணையில் குறிப்பிடப்படுகிறது.

### தேசிய மின்னணு பண பரிவர்த்தனை (National Electronic Fund Transfer (NEFT))

இந்தியா எங்கிலும், வங்கித் துறையில் நிதிகளைப் பரிவர்த்தனை செய்து தீர்வுகளை வழங்குவதன் ஒரு திறம்பட்ட, பாதுகாப்பான, சிக்கனமான, நம்பகமான மற்றும் வேகமான அமைப்பை ஏற்பாடு செய்து தருவதற்காகவும், தற்போதுள்ள காகித அடிப்படையிலான நிதிகள் பரிவர்த்தனை மற்றும் தீர்வக முறையில் உள்ள பளுவையும் குறைக்கின்றது.

### மின்னணுத் தீர்வு சேவை (Electronic Clearing System (ECS))

வாடிக்கையாளர்களுக்காக ஆர்பிஐ-ஆல் வடிவமைக்கப்பட்ட வசதி, இது, டிவிடெண்ட், கமிஷன், வட்டி போன்ற மொத்தமானதும் திரும்பத் திரும்பச் செய்கிறதுமான பரிவர்த்தனைகளுக்கான, காகித ஆவணங்களுக்குப் பதிலாக அமைகிறது

### ரியல் டைம் கிராஸ் செட்டில்மெண்ட் (ஆர்டீஜிசி)

ஆர்டீஜிஎஸ் என்பதில், பணப்பரிவர்த்தனை, ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு, ''நிகழ் நேரத்தில்'' மற்றும் ''மொத்த'' அடிப்படையில் நடைபெறுகிற ஒரு நிதிப் பரிவர்த்தனை முறையாகும். இது தான், வங்கித் துறை வழியாக செய்யப்படும் மிகவும் வேகமான பணப் பரிவர்த்தனை முறையாகும். நிகழ் நேரத்தில்'' தீர்வு என்பது, பணப் பரிவர்த்தனை எவ்வித காத்திருப்பு காலகட்டத்திற்கும் உட்பட்டதல்ல என்பதாகும். பரிவர்த்தனைகள், அவற்றைக் குறித்த பரிவர்த்தனை நடவடிக்கைகள் செயலாக்கப்பட்டவுடன் தீர்க்கப்படுகின்றன. கிராஸ் செட்டில்மெண்ட் (Gross settlement)'' என்பதற்கு, மற்ற பரிவர்த்தனைகள் எதோடும் சேர்க்காமல், ஒன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையிலேயே பரிவர்த்தனைகள் செய்து முடிக்கப்படுகின்றன என்பதே அர்த்தமாகும். பணப் பரிமாற்றம் என்பது இந்திய ரிசர்வ் வங்கியின் புத்தகங்களில் தான் இடம்பெறுகிறது என்பதைப் பரிசீலிக்கையில், அந்தப் பணப்பட்டுவாடா என்பது இறுதியானதாக இடம்பெறுகிறது மேலும் அதனைத் திரும்பப் பெற முடியாது. ஆர்டீஜிஎஸ் வசதியை உபயோகித்து, வாடிக்கையாளர்கள் பங்கேற்கும் வங்கிக் கிளைகள் எதிலும், ரூபாய் 2 லட்சம் மற்றும் அதற்கு மேலான தொகைகளை பணப் பரிமாற்றம் செய்யலாம்.

### வாடிக்கையாளரின் கணக்குகள் குறித்த பாதுகாப்பு

வாடிக்கையாளர்களிடமிருந்து வெளிப்படையான அல்லது மறைமுகமான ஒப்புதல் இல்லாமல், எந்தவொரு மூன்றாம் நபர் அல்லது தரப்பினருக்கும், வாடிக்கையாளரின் கணக்கு குறித்த விபரங்களை / விவரக் குறிப்புகளை வங்கி வெளிப்படுத்தாது. ஆயினும், சில விதிவிலக்குகளும் உள்ளன, உதாரணமாக, சட்டத்தின் கட்டாயத்தின் மீழ் தகவல்களை வெளியிடுதல், அதில் தகவல்களை வெளியிடுவதற்கான கடமை பொதுமக்களுக்கு உள்ளது, மேலும் வங்கியின் நலனுக்கும் அப்படி வெளியிடுவது அவசியமாகிறது

### மரணமடைந்தவரின் வைப்புநிதிக் கணக்கில் உள்ள நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்

- டெப்பாசிட் செய்துள்ளவர் வங்கியில் வாரிசு ஒருவரை நியமனம் செய்திருந்தால்; - மரணமடைந்த டெப்பாசிட் செய்தவரின் கணக்கில் உள்ள நிலுவை இருப்புத் தொகை, நாமினேஷன் செய்யப்பட்டுள்ளவரின் அடையாளத்தைக் குறித்து வங்கி திருப்தியடைந்த பிறகு, அப்படி நியமிக்கப்பட்டவரின் கணக்கிற்கு வங்கி பணத்தை பரிமாற்றம் செய்யும் / அவருக்குக் கொடுத்துவிடும்.
- வங்கியில் வாரிசு நியமனம் செய்துள்ள, கூட்டுக் கணக்கைப் பொருத்த வரையிலும், மேற்படி நடைமுறையே பின்பற்றப்படும்.
- ஒரு கூட்டு வைப்புநிதிக் கணக்கில், கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவர் மரணமடைந்து விடும் போது, அக்கணக்கில் உள்ள இருப்புத் தொகையை, மரணமடைந்தவரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கும், உயிருடன் இருக்கும் டெப்பாசிட் செய்துள்ளவர்(களு)க்கும், வங்கி கூட்டாகவே பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆயினும், கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள், ''இருவரில் ஒருவர் அல்லது உயிருடன் இருப்பவர் முன்னவர் / பின்னவர் அல்லது உயிருடன் இருப்பவர், உயிருடன் இருப்பவர்களில் யாராவது ஒருவர் அல்லது உயிருடன் இருப்பவர்; போன்ற வடிவங்களில், கணக்கில் உள்ள இருப்புத் தொகையை கொடுத்து விடுவதற்காக உரிமைக் கட்டளை கொடுத்திருந்த பட்சத்தில், மரணமடைந்தவரின் வாரிசுதாரர்களால் சட்டப்பூர்வமான அத்தாட்சிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதில் தாமதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, உரிமைக் கட்டளைக்கு ஏற்ப அப்பணம் கொடுக்கப்பட்டுவிடும்.
- வாரிசு நியமனம் எதையும் செய்திருக்காத பட்சத்திலும், வங்கிக்கு சந்தேகங்கள் எதுவும் இல்லாத போது அல்லது உரிமை கோருபவர்களின் மத்தியில் தகராறுகள் எதுவும் இல்லாத பட்சத்திலும், சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் அனைவரும் கூட்டாகக் கொடுக்கிற, அல்லது சட்டப்பூர்வ வாரிசுதாரர்களால், அவ்வப்போது வங்கியின் வாரியத்தால் அங்கீகரிக்கப்படுகிற வரம்பிற்குள், சட்டப்பூர்வ ஆவணங்களை வலியுறுத்தாமல் தங்கள் சார்பில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உரிமைக் கட்டளை கொடுக்கப்படுகிற நபர் கொடுக்கிற, விண்ணப்பம் மற்றும் முன்காப்பிட்டிற்கு எதிராக, மரணமடைந்தவரின் கணக்கில் நிலுவையிலுள்ள தொகையை வங்கி கொடுத்துவிடும். இது, சட்டப்பூர்வ சம்பிரதாயங்களை நிறைவு செய்வதில் உள்ள தாமதங்களின் காரணமாக ஏற்படுகிற சிரமத்திற்கு, டெப்பாசிட் செய்துள்ளவர்கள் ஆளாகவில்லை என்பதைப் பார்த்துக் கொள்வதற்கேயாகும்.

**மரணமடைந்தவரின் கணக்கில் உள்ள டெர்ம் டெபாசிட்டில் கொடுக்கப்படக் கூடிய வட்டி**

வைப்புநிதி முதிர்வடையும் தேதிக்கு முன்பே டெப்பாசிட் செய்தவர் மரணமடைந்து விடுகிற நிலையில், முதிர்வுத் தேதிக்குப் பிறகே டெப்பாசிட் செய்த தொகை கோரப்படுகிறது, முதிர்வுத் தேதிவரை, ஒப்பந்தம் செய்த வட்டி விகிதத்தில் வங்கி வட்டியைக் கொடுத்துவிடும். முதிர்வுத் தேதியிலிருந்து, பணப்பட்டுவாடா செய்யும் தேதி வரைக்கும், முதிர்வுத் தேதிக்கு அப்பால், வங்கியில் வைப்புத்தொகை தொடர்ந்து இருந்து வந்த காலத்திற்கு, இது குறித்து விஷயத்தில் வங்கியின் கொள்கைக்கு ஏற்ப; முதிர்வுத் தேதியில் நிலவுகிற உரிய வட்டி விகிதத்தில், தனி வட்டியை வங்கி வழங்கும்.

ஆயினும், வைப்புநிதி முதிர்வடையும் தேதிக்கு பிறகு டெப்பாசிட் செய்தவர் மரணமடைந்து விடுகிற நிலையில், முதிர்வுத் தேதியிலிருந்து, பணப்பட்டுவாடா செய்யும் தேதி வரைக்கும், முதிர்வுத் தேதியில் நிலவுகிற சேமிப்பு வைப்புநிதி விகிதத்தில் வட்டியை வங்கி வழங்கும்

**வைப்புநிதிகளுக்கான காப்பீட்டுப் பாதுகாப்பு**

வங்கிகளின் வைப்புத்தொகைகளுக்கு, டிஐசிஜிசி (DICGC) ஆல் குறிப்பிடப்படுகிற ஒருசில வரம்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, டெப்பாசிட் அண்டு கிரெடிட் கேரண்டி கார்பொரேஷன் ஆஃப் இந்தியா (Deposit Insurance and Credit Guarantee Corporation of India (DICGC)) -ஆல் வழங்கப்படுகிற காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பளிக்கப்படுகிறது.

- இந்தியாவில் செயல்படுகிற அயல்நாட்டு வங்கிகளின் கிளைகள் உட்பட அனைத்து வர்த்தக வங்கிகள், உள்ளூர் பகுதி வங்கிகள், பிராந்திய ஊரக வங்கிகள் ஆகியவை, டெப்பாசிட் அண்டு கிரெடிட் கேரண்டி கார்பொரேஷன் ஆஃப் இந்தியா (Deposit Insurance and Credit Guarantee Corporation of India (DICGC)) -ஆல் காப்பீடு செய்யப்படுகின்றன

- சேமிப்பு வைப்புநிதிகள், நிரந்தர வைப்புநிதிகள், நடப்பு வைப்புநிதிகள் போன்ற அனைத்து வைப்புநிதிகளையும் டிஐசிஜிசி (DICGC) காப்பீடு செய்கிறது.

- ஒரு வங்கியின் வெவ்வேறு கிளைகளில் வைத்துள்ள வைப்புநிதிகள், வங்கியின் உரிமத்தை கலைக்கிற / இரத்து செய்கிற தேதியில் அல்லது ஒருங்கிணைப்பு / இணைப்பு / மறுசீரமைப்பு அமலுக்கு வருகிற தேதியில் உள்ள அதே உரிமையிலும் அதே தகுதியிலும், அவர் வைத்துள்ள அசல் மற்றும் வட்டித் தொகை இரண்டிற்கும், அதிகபட்சமாக ரூபாய் 5,00,000 (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) வரை ஒன்றாகத் திரட்டப்படுகிறது.

- டிஐசிஜிசி (DICGC) அசலையும் வட்டியையும், அதிகபட்சம் ரூ. 5 லட்சம் தொகை வரை காப்பீடு செய்கிறது. உ.ம்.: ஒரு தனிநபர், ரூ. 4,95,000 அசல் தொகையோடு, அதற்கு சேர்ந்த ரூ 4,000 வட்டியுள்ள ஒரு கணக்கை வைத்திருந்தார் என்கிற பட்சத்தில், டிஐசிஜிசி (DICGC) ஆல் காப்பீடு செய்யப்படும் மொத்தத் தொகை ரூ 4,99,000 ஆகும். ஆயினும், அந்தக் கணக்கில் உள்ள அசல் தொகை ரூ. 5 இலட்சமாக இருக்கிற பட்சத்தில்; அதற்கு சேர்கிற வட்டிக்கு காப்பீடு செய்யப்பட மாட்டாது, அது வட்டி என்பதால் அல்ல ஆனால் அது காப்பீட்டு வரம்பான ரூ. 5 இலட்சம் என்ற தொகைக்கு மேலிருந்ததால்தான்.

- வைப்புத்தொகைக் காப்பீட்டைத் தீர்மானிப்பதற்கு முன்பாக, ஒரே வங்கியில் ஒரே வகையான உரிமைத்துவம் கொண்டுள்ள அனைத்து நிதிகளும் ஒன்றாக சேர்க்கப்படுகின்றன. அந்நிதிகள் வெவ்வேறு வகை உரிமைத்துவத்தில் இருக்கிற பட்சத்தில் அல்லது வெவ்வேறுவங்கிகளில் டெப்பாசிட் செய்யப்படுகிற பட்சத்தில், அவை தனித்தனியாக காப்பீடு செய்யப்படும். உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கிகளில் வைப்புத்தொகைகள் இருந்தால், ஒவ்வொரு வங்கியிலும் உள்ள வைப்புத்தொகைகளுக்கு தனித்தனியாகவே காப்பீட்டுப் பாதுகாப்பு பொருந்துகிறது.

- ஒரு தனிநபர், ஒரு வங்கியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிளைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வைப்புநிதிக் கணக்குகளை திறக்கிற பட்சத்தில், உதாரணமாக, திரு. X அவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட சேமிப்பு / நடப்புக் கணக்குகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிரந்தர / தொடர் வைப்புத் தொகை கணக்குகளைத் திறக்கிற பட்சத்தில், இத்தகைய கணக்குகள் அனைத்துமே ஒரே தகுதியிலும் ஒரே உரிமையிலும் வைக்கப்பட்டுள்ளதாகவே பரிசீலிக்கப்படும். ஆகவே இத்தகைய கணக்கில் உள்ள இருப்புத் தொகைகள் அனைத்தும் கூட்டப்படுகிறது மற்றும் அதற்கான காப்பீட்டுத் தொகையாக அதிகபட்சமாக 5 லட்சம் மட்டுமே காப்பீடாக வழங்கப்படுகிறது. திரு. X அவர்கள், ஒரு நிறுவனத்தின் பங்காளர் அல்லது இளவரின் பாதுகாவலர் அல்லது ஒரு நிறுவனத்தின் இயக்குநர் அல்லது ஒரு அறக்கட்டளையின் அறங்காவலர் என்ற முறையில் மற்ற வைப்புநிதிக் கணக்குகளையும் திறக்கிற பட்சத்தில், அல்லது ஒரு கூட்டுக் கணக்கை, தனது மனைவியான திருமதி. Y, என்பவரோடு திறக்கிறார் என வைத்துக் கொள்வோம், அவ்வாறு திறக்கின்ற பட்சத்தில், அது போன்ற கணக்குகள் வேறொரு தகுதியில் அல்லது வேறொரு உரிமையில் திறப்பதாகக் பரிசீலிக்கப்படுகிறது. அதற்கேற்ப, அது போன்ற வைப்புநிதிக் கணக்குகள், தனித்தனியாக ரூ. 5 லட்சம் வரையிலான காப்பீட்டுப் பாதுகாப்பை பெற்றனுபவிக்கும்.

- டெப்பாசிட் செய்பவர் தான் தனியான உரிமையாளர் என இருக்கிற வகையில், அந்த நிறுவனத்தின் பெயரில் வைக்கப்பட்டுள்ள வைப்புநிதியும், அவர் தனிப்பட்ட முறையில் வைத்துள்ள வைப்புநிதித் தொகையும், ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, காப்பீட்டுப் பாதுகாப்பு ரூ. 5 இலட்சம் வரை கிடைக்கிறது.

இது குறித்த மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து www.dicgc.org.in என்ற வலைத்தளத்தைப் பாருங்கள்.

**செயலற்ற கணக்குகள்**

24 மாதங்களுக்கும் மேலானதோர் தொடர்ச்சியான காலகட்டத்திற்கு, வாடிக்கையாளர் துவக்கிய பரிவர்த்தனைகள் எதுவும் இல்லாத கணக்குகள் (வட்டி வரவுகள், வட்டிக் கழிப்புகள் போன்ற கணினி உருவாக்கிய பரிவர்த்தனைகள் நீங்கலாக), வாடிக்கையாளரின் நலத்தின் பேரில், செயலற்ற கணக்கு என்பதாக கொடியிடப்படும். அது போன்ற கணக்கின் நிலைமையானது, உரிய அடையாள அத்தாட்சி ஆவணத்தோடும், அந்தக் கணக்கில் ஒரு நிதிப் பரிவர்த்தனையைத் துவக்கியும், வாடிக்கையாளர் எழுத்துப்பூர்வமாக ஒரு அறிவுறுத்தலைக் கொடுப்பதன் பேரில் மட்டுமே செயலற்றதிலிருந்து செயலுள்ள கணக்காக மாறும். அந்தக் கணக்குக் செயலற்றதாக இருக்கும் காலம் வரைக்கும், ஏடீஎம், நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங், ஃபோன் பேங்கிங் போன்ற கன்வீனியன்ஸ் பேங்கிங் வசதிகள் வாயிலான பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்படாது

**பாதுகாப்பு வைப்புநிதிப் பெட்டகங்கள்**

இவ்வசதி தேர்ந்தெடுத்த வங்கிக் கிளைகளில் வழங்கப்படுகிறது, இந்த வசதி கொடுக்கப்படுகிற இடங்களில், பாதுகாப்பு வைப்பக பெட்டகத்தை ஒதுக்கீடு செய்வது என்பது, இருப்பதைப் பொருத்தும், அத்துடன் இந்த சேவையுடன் இணைந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே அவை வழங்கப்படும். பாதுகாப்பு வைப்புநிதிப் பெட்டகங்களை, ஒரு தனிநபர் (ஒரு இளவராக இல்லாமலிருந்து) தனியாகவோ அல்லது மற்றொரு தனிநபர் (தனிநபர்களோடு) சேர்ந்து கூட்டாகவோ, இந்து கூட்டுக் குடும்பங்களோ, ஸ்தாபனங்களோ, வரையறுக்கப்பட்ட நிறுவனங்களோ, சங்கங்களோ, சொசைட்டிகளோ, அறக்கட்டளைகளோ வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். பெட்டக வசதியைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ வைத்துள்ள தனிநபருக்கு (தனிநபர்களுக்கு) நாமினேஷன் வசதி கிடைக்கிறது. பெட்டக வசதியை வாடகைக்கு எடுத்துள்ள தனிநபர், வாரிசை நியமிக்காமலேயே மரணமடைந்து, உண்மையென நிரூபிக்கத்தக்க உயில் கிடைக்கிற நிலையில், அந்த உயிலை நிறைவேற்றுபவருக்கு / நிர்வகிப்பவருக்கு அணுகல் கொடுக்கப்படும்.

**புகார்கள் மற்றும் குறைகள்**

வங்கியால் வழங்கப்படுகிற சேவைகள் தொடர்பாக, புகார் / குறை ஏதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு, வாடிக்கையாளர் புகார் / குறைகளைக் கையாளுவதற்காக வங்கியால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியை (அதிகாரிகளை) அணுகிக் கொள்வதற்கான உரிமை உள்ளது. புகார்கள் / குறைகளைத் தீர்த்துவைப்பதற்கான விபரங்களும் அமைப்பும், கிளை வளாகங்களில் / வங்கி வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படுகிறது. புகார் தெரிவிப்பதற்கான நடைமுறை சம்பந்தமாகத் தேவைப்படுகிற அனைத்துத் தகவல்களையும், கிளை அலுவலர்கள் வழங்குவார்கள். புகார் தெரிவித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கியிலிருந்து திருப்திகரமான பதிலை அந்த வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளாத நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட வங்கிக் ஆம்பட்ஸ்மேன் அணுகுவதற்கான உரிமை அவருக்கு உள்ளது.

**காசோலை போடும் பெட்டி மற்றும் காசோலைகளைப் பெற்றுக் கொண்ட ஒப்புதல்**

காசோலைகளைப் பெட்டியில் போடலாம் என்ற வசதி இருந்த போதிலும், வங்கியின் கவுண்டர்களில் பணம் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கப்படுகிற அனைத்து காசோலைகளுக்கும், வாடிக்கையாளர்கள் கேட்கும் போதெல்லாம், வங்கி அவர்களுக்கு பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை வழங்கும். மேற்கொண்டும், ஏடீஎம் காசோலை போடும் பெட்டிகளில், ''வாடிக்கையாளர்கள் வங்கியின் கவுண்டர்களில் காசோலைகளைக் கொடுத்து, பணம் செலுத்தும் சீட்டுகளில் (pay& in& slips), காசோலை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளவும் செய்யலாம் என்ற குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

**தொலைபேசியில் அழைக்காதீர்கள் பதிவகம்**

வங்கியின் மிகச் சமீபத்திய திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்து, வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை அனுப்பி வைக்கிறது. அது போன்ற தகவல்களை நாங்கள், கடிதம், மின்-அஞ்சல் அல்லது தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கிறோம் மேலும் அவற்றையும், இது போன்ற திட்டங்களும் சேவைகளும் யார் யாருக்கு அதில் ஆர்வம் இருக்கலாம் மற்றும் யார்யாருக்கு இது பலனுள்ளதாக இருக்கும் என நாங்கள் எண்ணுகிறோமோ அவர்களுக்கு மட்டுமே அனுப்பி வைக்கிறோம்.

உங்கள் அந்தரங்கத்திற்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம் மேலும் உங்களில் சிலர், எமது டெலி மார்க்கெட்டிங் செயல்பாடுகளுக்காக தொலைபேசி/மின்னஞ்சல்/எஸ்எம்எஸ் மூலமாகத் தொடர்பு கொள்ளப்படுவதை விரும்பாமலிருக்கலாம் என்பது ஏற்றத் தக்கதுதான். இந்நிலையில் தான் நீங்களும் இருக்கிறீர்கள் என்றால், எமது டெலி மார்கெட்டிங் பட்டியலிலிருந்து உங்களை அகற்றிவிட நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை, எமது வலைத்தளத்தில் காணப்படுகின்ற தொலைபேசியில் அழைக்காதீர்கள்'' சேவைப் பதிவு வசதியை பயன்படுத்தி நீங்கள் இதை செய்து கொள்ளலாம் அல்லது எங்களுக்குக் கடிதம் எழுதியோ அல்லது தொலைபேசியில் அழைத்தோ உங்கள் தொலைபேசி எண்ணை (எண்களை) பதிவு செய்து கொள்ளலாம். உங்களை நீங்களே பதிவு செய்து கொள்வதற்காக கொடுக்கிற விபரங்கள் தொடர்ந்து இரகசியமானதாகவே இருக்கும்.

நீங்கள் பதிவுசெய்து கொண்ட பின் :

- நீங்கள் பதிவு செய்திருந்த எண்ணிற்கு, வங்கியிலிருந்து விரும்பத்தகாத விற்பனை அழைப்புகள் மூலம் வங்கி உங்களை அழைப்பதைத் தடுக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

- அக்குறிப்பிட்ட எண்களை, எமது டெலி மார்கெட்டிங் பட்டியலிலிருந்து அகற்றுவதற்கு, தயவுசெய்து 15 வேலைநாட்கள் அவகாசம் கொடுங்கள்.

**வைப்புத்தொகை பங்கேற்பாளர் (Depository Participant) சேவைகள்**

வங்கி பலவகை நிதித் திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. இதில் வைப்புத்தொகை பங்கேற்பாளர் சேவைகளும் அடங்கும். எங்களது வங்கி இந்தியா முழுவதுமுள்ள தனது கிளைகளின் மூலமாக வைப்புத்தொகை பங்கேற்பாளர் சேவைகளை வழங்க இரண்டு டெபாசிட்டரிகளிலும் (அதாவது என்எஸ்டிஎல் மற்றும் சிடிஎஸ்எல்) வைப்புத்தொகை பங்கேற்பாளராக (டிபி) பதிவு செய்துள்ளது. சேவைகளில் கணக்குத் திறப்பது, பராமரிப்பது, டிமெட்டீரியலைசேஷன், ரீமெட்டீரியலைசேஷன், சந்தை டிரான்ஸ்ஃபர்கள் மூலமாக வியாபாரங்களை தீர்த்து வைத்தல், ஆஃப் மார்க்கெட் டிரான்ஸ்ஃபர்கள், இன்டர்டெபாசிட்டரி டிரான்ஸ்ஃபர்கள், நாமினேஷன், டிரான்ஸ்மிஷன், டிமோகிராபிக் விவரங்களில் மாற்றம் செய்தல் போன்றவை அடங்கும்.

**கணக்குத் திறத்தல்:** ஒரு வாடிக்கையாளர் தன்னிடம் உள்ள பங்குச் சான்றிதழ்களை மின்னணு வடிவமாக மாற்றிப் பெறுவதற்காக ஒரு டீமேட் கணக்கை திறக்க வேண்டியுள்ளது. காகித சான்றிதழ்களை மின்னணு வடிவமாக மாற்ற ஹோல்டிங் முறைகளின்படி கணக்கை திறக்க வேண்டும். இரண்டாம்பட்ச சந்தைப் பரிவர்த்தனைகளாக இருக்கும்பட்சத்தில், அதாவது, பதிவு செய்த பங்குத் தரகரின் மூலமாக பங்குகளை வாங்க/ விற்க, தனது கணக்கில் பங்குகளை வரவு வைக்க /பற்று வைக்க வாடிக்கையாளர் தன் டீமேட் கணக்கு விவரங்களை தரகருக்கு கொடுக்க வேண்டும். வாடிக்கையாளர் ஒரு டீமேட் கணக்கை துவக்க முழுமையாக நிரப்பப்பட்ட கணக்குத் திறக்கும் படித்துடன் வாடிக்கையாளருக்கு உரிய கேஒய்சி ஆவணங்களை (அதாவது அடையாள சான்று, முகவரி சான்று மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கூடிய மற்ற விவரங்கள்) வைப்புத்தொகை பங்கேற்பாளரிடம்(DP) சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமிட வேண்டும். வாடிக்கையாளர் சமர்ப்பித்த ஆவணங்கள் / விவரங்களுடன் விண்ணப்பபடிவத்தை வெற்றிகரமாக செயல்முறைப்படுத்திய பின்னர், டீமேட் கணக்கு திறக்கப்படுகிறது மற்றும் வங்கி அதை வாடிக்கையாளருக்கு தெரிவிக்கிறது. வாடிக்கையாளர் எதிர்காலத்தில் வங்கியுடன் மேற்கொள்ளும் அனைத்து கடிதத் தொடர்புகளிலும் டீமேட் கணக்கை குறிப்பிட வேண்டும்.

**பங்குகளை டீமெட்டீரியலைசேஷன் செய்வது:** டீமெட்டீரியலைசேஷனுக்காக டெபாசிட்டரிகளில் பதிவு செய்துள்ள பங்குகள் மட்டுமே டீமெட்டீரியலைஸ் செய்யப்படும். கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மட்டுமே டீமெட்டீரியலைஸ் செய்யப்படும். பங்குகளை வைத்திருப்பவர்களின் பெயர்களுடன் டீமேட் கணக்கில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் பொருந்த வேண்டும். பங்குச் சான்றிதழ்கள் வெவ்வேறு பெயர் வரிசையில் இருந்தாலும் கூட அதே கணக்கில் பங்குகள் டிரான்ஸ்பொசிஷன் மற்றும் டீமேட் வசதி கிடைக்கும். டீமெட்டீரியலைஸ் செய்யப்பட உள்ள பங்குச் சான்றிதழ்களுடன் டீமெட்டீரியலைசேஷனுக்கான பரிந்துரைக்கப்பட்ட வேண்டுதல் படிவத்தில் கிளையில் வேண்டுகோளை வாடிக்கையாளர் (பதியப்பட்ட உரிமையாளர்) சமர்ப்பிப்பார். சமர்ப்பிக்கும் முன்பாக, ''டீமெட்ரீயலைசேஷனுக்காக சரண்டர் செய்யப்பட்டது'' என்று சான்றிதழ்களில் எழுத வேண்டும். வழக்கமாக, வாடிக்கையாளர், DP இடம் டீமேட் சமர்ப்பித்த தேதியிலிருந்து சுமார் 30 நாட்களில் டீமேட் உறுதிப்படுத்துதலை பெறுவார். ஒவ்வொரு நிறுவனத்தின் பங்குகளையும் டீமெட்டீரியலைஸ் செய்ய ஒரு தனித் தனியான வேண்டுகோள் தேவைப்படுகிறது. பல்வேறு நிறுவனங்களாக இருந்தால், டீமெட்டீரியலைசேஷனுக்காக தனித்தனியான வேண்டுகோள்கள் தேவை. கிளை, வேண்டுகோளில் குறிப்பிடப்பட்ட விவரங்களை சரிபார்த்து டீமெட்டீரியலைசேஷன் வசதி அந்த நிறுவனத்தில் உள்ளதா என்பதையும் சோதிக்கும். டீமேட் கணக்கில் கணக்கு வைத்திருக்கும் அனைவரும் கண்டிப்பாக வேண்டுகோள் படிவத்தில் கையொப்பமிட வேண்டும். கிளை வேண்டுகோள் படிவத்தில் இடப்பட்டுள்ள கையொப்பத்தை டீமேட் கணக்கை வைத்து சரிபார்க்கும். சரியாக இருந்தால், கிளை அந்த வேண்டகோளை தனது சிஸ்டம்களில் ஏற்கும். மேலும் அதனை மேற்கொண்டு செயல்முறைக்காக சென்ட்ரலைஸ்ட் டெபாசிட்டரி ஆபரேஷன்களுக்காக அனுப்பி வைக்கும். உரிய ஆர்டிஏ/நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டுகோள் செயல்முறைப்படுத்தப்படலாம்/ மறுக்கப்படலாம். மறுக்கப்பட்டால், தேவையான தீர்மானங்களுக்காக ஆவணங்கள் வாடிக்கையாளருக்கு திருப்பித் தரப்படும். அதன் பின்னர் அந்த வேண்டுகோள் டீமெட்டீரியலைசேஷன் நோக்கத்திற்காக மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

**பங்குகளை ரீமெட்டீரியலைசேஷன் செய்தல்:** வாடிக்கையாளர் மின்னணு வடிவத்தில் வைக்கப்பட்டுள்ள பங்குகளை மீண்டும் காகித வடிவிற்கு மாற்ற விரும்பினால், அவர் ரீமெட்டீரியலைசேஷன் படிவத்தை கிளையில் சமர்ப்பிக்க வேண்டும். வாடிக்கையாளர் தனது டீமேட் கணக்கில் வைத்திருக்கும் ஃபிரீ பேலன்ஸிங் பங்குகளை மட்டுமே காகித வடிவிற்கு மாற்ற முடியும். வாடிக்கையாளர் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி கிளையில் ரீமெட்டீரியலைசேஷனுககான வேண்டுகோளை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. டீமேட் கணக்கில் கணக்கு வைத்திருக்கும் அனைவரின் கையொப்பங்கள் மற்றும் டீமேட் கணக்கில் உள்ள ஃபிரீ ஹோல்டிங்ஸ் உட்பட விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட விவரங்களை கிளை சரிபார்க்கும். சரியாக இருப்பது கண்டறியப்பட்டால், கிளை அனைத்து வகைகளிலும் தனது சிஸ்டம்களில் வேண்டுகோளை பதிவு செய்யும் மற்றும் அதனை மேற்கொண்டு செயல்முறைப்படுத்த சென்ட்ரலைஸ்ட் டெபாசிட்டரி ஆபரேஷன்களுக்காக அனுப்பி வைக்கும். அனுப்பி வைக்கப்பட்ட வேண்டுகோளை அதற்குரிய ஆர்டிஏ/ நிறுவனம் செயல்முறைப்படுத்தலாம் / மறுக்கலாம். மறுத்தால், தீர்மானத்திற்காக ஆவணங்கள் வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

**வியாபாரங்களை தீர்த்து வைத்தல்:** ஒரு வாடிக்கையாளர் பங்கு வர்த்தகத்தின் மூலமாக தனது பங்குகளை விற்க செபியில் பதிவு செய்த தரகரிடம் (க்ளியரிங் மெம்பர்) வர்த்தக கணக்கை திறக்க வேண்டும். தரகரின் மூலமாக பங்குகளை விற்ற பின்னர் வாடிக்கையாளர் டி+2 நாட்களுக்குள்ளாக பங்குகளை தனது டீமேட் கணக்கிலிருந்து தரகரின் மொத்த கணக்கிற்கு மாற்ற வேண்டும். வாடிக்கையாளர் அறிவுரை ஸ்லிப்பில் விற்கப்பட்ட பங்குகளின் அளவு விவரங்களுடன் அறிவுறுத்தல் ஸ்லிப்பை வழங்குவதில் சிஎம்-பிபி ஐடி (க்ரியரிங் மெம்பர்), செட்டில்மென்ட் செக்மென்ட், செட்டில்மென்ட் எண் விவரங்கள் போன்ற விவரங்களை குறிப்பிட்டு கிளையில் அறிவுறுத்தல் ஸ்லிப்பை சமர்ப்பிக்க வேண்டும். இதுபோன்ற வியாபாரங்கள் ''ஆன் மார்க்கெட் டிரேட்கள்'' என்று குறிப்பிடப்படுகின்றன. இதில் வியாபாரம் அதற்குரிய பங்கு வர்த்தகத்தின் மூலமாக விற்கப்படுகின்றன. அதுபோலவே வாடிக்கையாளர் ஒரே டெபாசிட்டரிக்குள்ளாக ஒரு டீமேட் கணக்கிலிருந்து வேறு டீமேட்கணக்கிற்கு மாற்ற விரும்பினால், செய்யப்படும் தீர்வு கடமைகள் ''ஆஃப் மார்க்கெட் டிரேட்கள்'' என்று அழைக்கப்படுகின்றன.

இன்டர் டெபாசிட்டரி அறிவுறுத்தல்களாக இருக்கும்பட்சத்தில், ஒரு டெபாசிட்டரியில் உள்ள ஒரு டீமேட் கணக்கிலிருந்து மற்றொரு டெபாசிட்டரியில் உள்ள டீமேட் கணக்கிற்கு பங்குகள் நகர்த்தப்படுகின்றன, இது ''இன்டர் டெபாசிட்டரி டிரேட்கள்'' என்று அழைக்கப்படுகின்றன.

முழுவதும் நிரப்பப்பட்ட அறிவுறுத்தல் ஸ்லிப்பை பெற்றதும், கிளை அறிவுறுத்தல் ஸ்லிப்பில் நிரப்பப்பட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்கும். அவை சரியாக இருந்தால், சிஸ்டமில் பரிவர்த்தனைக்கான அனைத்து வேலைகளையும் செய்யும். ஏதேனும் மறுக்கப்படும் பட்சத்தில் செய்ய வேண்டிய தேவையான திருத்தங்களுக்காக உடனடியாகத் தெரிவிக்கப்படும்.

**வாரிசு நியமனம்**

ஒரு வாடிக்கையாளர் தனது டீமேட் கணக்கில் பரிந்துரைக்கப்பட்ட வாரிசு நியமன படிவத்தை நிரப்பி யாரையும் தனது வாரிசாக நியமிக்கலாம். கணக்கு வைத்திருப்பவர் எந்தநேரத்திலும் வாரிசு நியமன படிவத்தை நிரப்பி கிளையில் வழங்குவதன் மூலம் வாரிசு நியமனத்தை மாற்றிக் கொள்ளலாம் / நீக்கிவிடலாம். கணக்கு வைத்திருப்பவர் இறக்கும்பட்சத்தில், டீமேட் கணக்கில் உள்ள பங்குகள் அவர் இறக்கும்போது வாரிசாக பதிவு செய்யப்பட்டவருக்கு மாற்றித் தரப்படும். டீமேட் கணக்கில் ஒரு வாரிசை நியமனம் செய்துகொள்ள வேண்டும் என்பது எப்போதுமே அறிவுறுத்தத் தக்கது.

**டிரான்ஸ்மிஷன்**

இறந்தவர் கணக்கு வைத்திருப்பவர்களின் ஒருவராக இருக்கும்பட்சத்தில், உயிருடன் இருக்கும் கணக்கு வைத்திருப்பவர்கள், நோட்டரி செய்த இறப்புச் சான்றிதழின் பிரதியுடன் பரிந்துரைக்கப்பட்ட டிரான்ஸ்மிஷன் படிவத்தில் இறந்தவரின் கணக்கில் உள்ள பங்குகளை உயிருடன் இருப்பவர்களின் கணக்குகளுக்கு மாற்றித் தருமாறு வங்கிக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக, உயிருடன் இருக்கும் கணக்கு வைத்திருப்பவர்(கள்) கண்டிப்பாக டெபாசிட்டரி கணக்கு வைத்திருக்க வேண்டும். அது அதே டெபாசிட்டரி அல்லது வேறு டெபாசிட்டரிக்குள்ளாக அதே டிபி அல்லது வேறு டிபியிடம் வைக்கப்பட்டிருக்கலாம்.

தனி கணக்கு வைத்திருப்பவர் இறக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலமாக இறந்தவரின் டீமேட் கணக்கில் உள்ள இருப்புகளை இறந்தவரின் சட்டப்பூர்வ வாரிசு(கள்) அல்லது சட்டப்பூர்வ பிரதிநிதியின்(கள்) கணக்கிற்கு மாற்றித்தர கோரிக்கை விடுக்க இறந்தவரின் சட்டப்பூர்வ வாரிசு(கள்) அல்லது சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) கண்டிப்பாக வங்கிக் கிளையை அணுக வேண்டும்.

வேறு செயல்பாடுகள்: டீமேட் கணக்கு திறப்பதை தொடர்ந்து, முகவரி, வங்கி விவரங்கள், கையொப்பம், வாரிசு நியமனம் போன்றவை உள்ளிட்ட புதுப்பிக்கும் இதர செயல்பாடுகளில் டீமேட் கணக்கில் செய்யும் ஏதாவது மாற்றங்களுக்காக வாடிக்கையாளர் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தேவையான புதுப்பித்தல்களுக்காக வாடிக்கையாளர் வங்கி கிளைக்கு சம்பந்தப்பட்ட வேண்டுகோளை சமர்ப்பிக்க வேண்டும். டீமேட் கணக்கில் விவரங்களை வெற்றிகரமாக புதிதாக சேர்த்த பின்னர், வங்கி வாடிக்கையாளருக்கு தேவையான உறுதிப்படுத்தலை கொடுக்கும்.

நகலுரிமை, கோட்டக் மஹிந்திரா குழுமம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.